





Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 152 குரோதி வருடம், தை மாதம் 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (21.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 20, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12







# பொலிஸ் ஆணைக்குழு புரியாத புதிர்!

## அரசாங்கத்தை கண்டுகொள்ளவில்லையென ஜனாதிபதி அநுர ஹொரணையில் தெரிவிப்பு



அரசாங்கம் விடுக்கும் கோரிக்கைகளை தேசிய பொலிஸ் ஆணைக்குழு கவனத்திற்கொள்ளாமை தனக்கு ஆச்சரியத்தை தருவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி அநுர, தனது தனிப்பட்ட தேவைக்கோ அல்லது தனிப்பட்ட வர்த்தகத்துக்கோ பொலிஸ் ஆணைக்குழுவிடம் எந்த கோரிக்கையையும் விடுக்கவில்லையென குறிப்பிட்டார்.

குற்றப் புலனாய்வுத் துறையின் விசாரணைகள் குறித்து அறிந்த 650 திறமையான அதிகாரிகள் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பிறகு, இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் அந்த அதிகாரிகளை மீண்டும் குற்றப் புலனாய்வுத் துறைக்குக் கொண்டுவர விரும்புவதாகவும் ஆனால் பொலிஸ் ஆணைக்குழு அதனை இழுத்தடிப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஹொரணையில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தேசிய மக்கள் சக்தி ஆட்சி பொறுப்பேற்று இரு மாதங்களே நிறைவடைகின்றன. அவ்வாறெனில் நாங்கள் இன்னும் ஐந்து வருடங்கள் நீண்ட பயணம் செல்ல வேண்டியுள்ளது. ஆனால், ஆட்சியேற்று இந்த குறுகிய நாட்களில் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் இந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு முயற்சிக்கிறார்கள். கனவு காண்பதற்கு சகலருக்கும் உரிமை இருக்கிறது. எனவே, கனவு கண்டு கொண்டு கனவுலகத்திலேயே அவர்களால் இருக்க முடியும். » 02 பக்கம்

# பிரமிட் முறையூடாக நிதி மோசடி

## 21 நிறுவனங்கள் அடையாளம்





தடைசெய்யப்பட்டுள்ள பிரமிட் திட்டங்களை முன்னெடுத்துவந்த 21 நிறுவனங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. » 02 பக்கம்

# மனுஷ இன்று சி.ஐ.டியில் ஆஜர்

தென்கொரிய வேலைவாய்ப்புச் சம்பவம் தொடர்பில், முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று (21) ஆஜராகி வாக்குமூலம் வழங்குவதற்கு தயாராக இருப்பதாக அவரின் சட்டத்தரணி கொழும்பு நீதவான் நீதிமன்றத்துக்கு நேற்று (20) அறிவித்திருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் தன்னை கைதுசெய்வதற்கு முன்னர் எதிர்பார்க்கப்பட்ட பிணையின் அடிப்படையில் விடுவிக்குமாறு கோரி மனுஷ நாணயக்காரவினால் முன்வைக்கப்பட்ட மனு நேற்று கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி... » 02 பக்கம்

# புதிய கூட்டணிக்கு ஐ.தே.க. அனுமதி



ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து கூட்டணி அமைப்பதற்கான கலந்துரையாடலை முன்னெடுக்க ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் நேற்று (20) ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புறக்கோட்டை சிறிகொத்தா கட்சி தலைமை அலுவலகத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சியின் செயற்குழு நேற்று கூடியது. ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட ஏனைய அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடி ஐக்கிய தேசிய முன்னணியாக எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிட செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றை இணைத்துக்கொள்வதற்கான கலந்துரையாடல் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன மற்றும் பொதுச் செயலாளர் தலதா அதுகோரள தலைமையில் முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. » 02 பக்கம்

# எங்களின் திட்டங்களை உரிமைகோருவது போலி சான்றிதழ் தயாரிப்பது போன்றதாகும்

## அரசாங்கம் மக்களை ஏமாற்றுவதாக உதய கம்மன்பில குற்றச்சாட்டு



“நாட்டில் கடந்த அரசாங்கங்களினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை தமது வேலைத்திட்டங்களாக புதுப்பித்து அதில் உரிமை கொண்டாடுவது, மற்றையவர்களின் குழந்தைகளுக்கு போலி பிறப்புச் சான்றிதழை தயாரிப்பது போன்ற விடயமாகும். மக்களை ஏமாற்றாமல் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் அவர்களுக்கென தனித்துவமான வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முயற்சிக்க வேண்டும்”என்று பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

திருகோணமலை எண்ணெய்க் குத தொகுதியிலுள்ள 99 எண்ணெய்க் குதங்களையும் தேசிய எரிபொருள் களஞ்சிய அவசியத்தையும் விட கொள்ளளவு அதிகமென்று குறிப்பிட்டு, அதனால் 24 எண்ணெய்க் குதங்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கவும் தற்போது எல்.ஐ.ஓ.சி. நிறுவனம் பயன்படுத்தும் 14 எண்ணெய்க் குதங்களை அந்த நிறுவனத்துக்கு வழங்கவும்... » 02 பக்கம்

# பிளவுபடுத்தும் நோக்கம் இல்லை

## ஐ.ம.ச.மிக அவசியமென்கிறார் தலதா



ஐக்கிய தேசியக் கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் பலமான கட்சிகளாக உருவாக்குவதற்காகவே பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம். அதற்கு அப்பால் ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவை ஏற்படுத்தும் எண்ணம் தமக்கு சிறிதும் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தலதா அதுகோரள தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி தமக்கு மிகவும் அவசியமான கட்சியென்றும் அவர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார். » 02 பக்கம்





» 03பக்கம்

# ரயில் போக்குவரத்தை ஆராய்ந்த அமைச்சர் பிமல்

## மக்களோடு மக்களாக பயணம்



போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று திங்கட்கிழமை (20) காலை மொரட்டுவையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி அலுவலக ரயிலில் மக்களோடு மக்களாக பயணித்துள்ளார்.

இந்த பயணத்தின்போது, பயணிகள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் குறித்து பிமல் ரத்நாயக்க பயணிகளுடன் உரையாடும் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன. » 02 பக்கம்

## உஷ்



ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டத்தில் ஒரே களேபரமாம்.

பாராளுமன்றுக்கான தேசியப்பட்டியலை எந்த அடிப்படையில் பகிர்ந்தீர்கள்? யாரைக்கேட்டு கட்சியின் முடிவுகள் எடுக்கப்படுகின்றன? என்றெல்லாம் கட்சியின் தலைவர், செயலாளரை பார்த்து கேள்வியெழுப்பினாராம் கட்சியின் செயற்குழு உறுப்பினரும் சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவருமான உப்புல் ஜயசூரிய.

ஏற்கனவே 50 கோடி ரூபாவை தேர்தலுக்காக செலவழித்துவிட்டு இப்போது தேசியப்பட்டியல் கிடைக்கவில்லையென்று அரிசி ஆலை உரிமையாளர் ஒருவரும் ஐக்கிய மக்கள் சக்திக்கெதிராக போர்க்கொடி தூக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.






## கமெண்ட் கந்தர்...



யாழ்ப்பாண கலாசார நிலையம் என்ற பெயரை எழுதவே பெரும்பாடு..... இந்த இலட்சணத்தில அரசியல் தீர்வும் தமிழர்களுக்கு உரிமையும்...

# நெல்லின் விலையில் வீழ்ச்சி



## ரூ.100வுக்கு கொள்வனவு செய்ய ஆலை உரிமையாளர்கள் தீர்மானம்

ஈரப்பதன் கொண்ட ஒரு கிலோ நெல்லை 100 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் அதனடிப்படையில் அரிசியின் விலையிலும் வீழ்ச்சி ஏற்படும் எனவும் இலங்கை சிறிய மற்றும்... » 02 பக்கம்

# விவசாய பொருட்களுக்கான 10 சதவீத கழிவு அறவீட்டை அகற்ற நடவடிக்கை

## வட மாகாண ஆளுநர் வேதநாயகன் பணிப்புரை



விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு 10 சதவீத கழிவு அறவிடப்படுவது இந்த ஆண்டு ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் விடுத்திருந்த பணிப்புரைக்கு அமைவாக யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் 10.01.2025 அன்று ஆளுநருக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் வாய்மொழி மூலமாகவும் 15.01.2025 அன்று எழுத்துமூலமாகவும் தெரியப்படுத்தப்பட்டது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.ஸ்ரீ வர்ணனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில்,

கடந்த காலங்களில் மத்திய அமைச்சர்களாலும் எமது மாகாண சபைக்கு உரித்தான முதலமைச்சராலும் காலத்துக்கு காலம் பதவியிலிருந்துள்ள ஆளுநர்களாலும் மற்றும் எமது திணைக்களத் தலைவர்களாலும் இந்தப் பிரச்சினை தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இருந்தபோதிலும் இப் பிரச்சினையை எம்மால் 100 சதவீதம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. எமது திணைக்களம் சார்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

சந்தைகளை குத்தகைக்கு வழங்கும்போது சந்தை குத்தகை ஒப்பந்தங்களில் 10 சதவீதக் கழிவு அறவிடப்பட முடியாது என்ற இறுக்கமான வாசகங்கள் உட்படுத்தப்பட்டு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

சந்தைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள காட்சிப்பலகைகளிலும் வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் மற்றும் அனைவருக்குமே தெரியக்கூடியதாக இவ் 10 சதவீதக் கழிவு அறவிடப்படுவது சட்டமுரணானது என்பது தொடர்பாக தகுந்த காட்சிப்படுத்தல்கள் சந்தைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

உத்தியோகத்தர்கள் அடிக்கடி சந்தைகளுக்கு பயணம் மேற்கொண்டு மேற்பார்வை செய்கின்ற நடைமுறைகளும் இருந்து வந்துள்ளன. ஆயினும் இதனை எம்மால் 100 சதவீதம் கட்டுப்படுத்துவதற்கு முடியவில்லை. மறைமுகமான முறையிலேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதாவது பேரம் பேசலில் மிகவும் பலவீனமாகவுள்ள விவசாயிகளிடமிருந்து வர்த்தகர்களால் அநியாயமான முறையிலேயே இக் கழிவுகள் அறவிடப்படுகின்றன. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகளோ அல்லது ஏனையோரோ துணிந்து இவ் விடயம் தொடர்பில் முறையிடுவதற்கும் தயங்குகின்றார்கள்.

ஏனெனில் மீண்டும் அதே சந்தையில் அதே வர்த்தகர்களை நாடிச் சென்றே விவசாயிகள் தமது பொருட்களை விற்க வேண்டிய நிலைமை இருப்பதால், வர்த்தகர்கள் தமது பொருட்களை புறக்கணித்து விடுவார்கள் என்ற அச்சத்தில் அவர்கள் எங்களுக்கு முறையிடுவதில்லை. இருப்பினும் சில முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற போது நாங்கள் அவற்றை ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் உள்ளன. முறைப்பாடுகளை ஆராய்ந்து உறுதிப்படுத்துவதில் சிரமம் காணப்படுகின்றது.

முறைப்பாடுகளை உறுதிப்படுத்தப்படும் பட்சத்திலேயே நடவடிக்கையை எம்மால் மேற்கொள்ளமுடியும். நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான ஆதாரங்களை சேகரிப்பதிலும் பல்வேறு சிரமங்கள் காணப்படுகின்றன.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகிய நான், பல்வேறு சந்தைகளுக்கும் என்னுடைய உத்தியோகத்தர்கள் சகிதம் கண்காணிப்புப் பயணத்தை மேற்கொண்டிருந்தேன். வியாபாரிகள் சந்தைக்கு பொருட்களை அதிகாலை 3.30 மணி தொடக்கம் எடுத்து வருவார்கள். அந்த நேரத்தில் எந்தவொரு முன்னறிவிப்பும் இல்லாமல் நாங்கள் சந்தைகளுக்குச் சென்று பார்வையிட்டோம்.

ஒன்று, இரண்டு வியாபாரிகள் இவ்வாறு நடந்து கொள்ளும் போது மறைமுகமாக அவதானித்து அவர்களை விசாரித்து கடுமையாக எச்சரிக்கை செய்தோம். அவர்களிடமிருந்து பணத்தையும் பெற்றுக் கொடுத்திருக்கின்றோம்.

குறிப்பாக மருதனார்மடம் சந்தையில் நான் உட்பட எமது குழுவினர் அங்கே சென்று கண்காணிப்பில் ஈடுபட்டபோது, விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்யமாட்டோம் எனத் தெரிவித்து 200 க்கும் அதிகமான வியாபாரிகள் எமக்கு எதிராகப் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தினர். இதனால் விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு கொண்டு வந்த விவசாயிகளும் பொருட்களைக் கொள்வனவு செய்ய வந்த பொதுமக்களுக்கும் எமக்கு எதிராகச் செயற்பட்டனர்.

வியாபாரிகளுக்கு வழக்கமாக வழங்குவதைப்போல் தாம் 10 சதவீதக் கழிவுடன் பொருட்களைக் கொடுக்கின்றோம் எனத் தெரிவித்த விவசாயிகள் இதில் எம்மை தலையிட வேண்டாம் என்று கூறினர். வியாபாரிகள் எமது பொருட்களை வாங்காவிட்டால் அவை பழுதடைந்துவிடும் எனவும் தெரிவித்து எம்முடன் கடுமையான தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனால் நாம் அங்கிருந்து பின்வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

விவசாயிகள் மிகவும் பலவீனமாக இருக்கின்றார்கள். விவசாய சங்கங்கள் அவர்களுடைய பிரச்சினைகளை அந்த இடத்திலேயே அணுகுவதற்கு தயாராக இல்லை. வர்த்தகர்கள் ஒற்றுமையாக செயற்படுவதனூடாக கழிவு விடயத்தை முன்னெடுத்து வருகின்றார்கள்.

அநேகமான விவசாயிகள் அதாவது 90 சதவீதத்துக்கு மேற்பட்ட விவசாயிகள், தங்களுடைய விவசாய உற்பத்திப் பொருட்களை வாடிக்கையாக ஒரு சில வர்த்தகர்களுக்கே வழங்கி வருகின்றார்கள். நேரடியாக கொண்டு வந்து சந்தையிலும் வழங்குகின்றார்கள்.

அநேகமான பொருட்கள் அவர்களுடைய தோட்டத்திலேயே வியாபாரிகளால் நேரடியாகச் சென்று கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. எந்தவிதமான பேரம் பேசலும் இன்றி வியாபாரிகளுக்கு விவசாயிகளின் உற்பத்திப் பொருட்கள் செல்கின்றன. இதைவிட, பெரும்பாலும் விவசாயிகள் வர்த்தகர்களிடம் கடன் வாங்கியே தோட்டம் செய்கின்றார்கள்.

இந்நிலையில் 10 சதவீதத்துக்கும் குறைவான விவசாயிகள் இச் சந்தைகளுக்கு புதிதாக வந்து பேரம் பேசலின் மூலமாக விவசாய உற்பத்திப் பொருட்களை அவர்களுக்கு விற்க முனைவது ஏமாற்றத்தையே கொடுக்கின்றது. வர்த்தகர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து, விவசாயிகள் அதிகமாகப் பேரம் பேசினால் அதை வாங்க மாட்டார்கள். தங்களுடைய நிபந்தனைகளுக்கு இணங்கி வராவிட்டால் விவசாயிகளிடம் வாங்காமலே புறக்கணித்து விடுவார்கள் என்ற அச்சத்தில் விவசாயிகளும் அவர்கள் கேட்கும் விலைக்கே கொடுத்து விட வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது.

இந்த நிலைமையை மாற்றுவதற்கு மீனவ சங்கங்கள் தங்களுடைய மீன் சந்தைகளை எவ்வாறு பரிபாலிக்கின்றார்களோ அதே நடைமுறை பின்பற்றப்படுவது சிறப்பாக அமையும். பிடிக்கப்படுகின்ற மீன்களை கடற்கரையில் அந்தச் சங்கத்தின் அனுமதியின்றி யாரும் எந்தவொரு வியாபாரிக்கோ அல்லது தனிப்பட்ட நபர்களுக்கோ கொடுத்து விட முடியாது. அவ்வாறு மீறி கொடுக்கும் பட்சத்தில் அவர்கள் அந்தச் சங்கத்தில் இருந்து நீக்கப்படுவார்கள்.

மீன் ஏலம் கூறல் ஊடாக மட்டுமே அதனை யாரும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற இறுக்கமான நடைமுறையை மீனவ சங்கங்கள் தமது கட்டுக்கோப்பிலே வைத்து நடைமுறைப்படுத்துவதால் மீனவர்கள் பாதிக்கப்படாமல் தங்களுடைய பொருட்களுக்கு ஏலம் கூறல் மூலம் நியாயமான விலையைப் பெற்றுக்கொள்கின்றார்கள். ஆனால் விவசாயிகளுக்கு இவ்வாறான நிலைமையானது மரக்கறி சந்தைகளில் காணப்படவில்லை. இந்த விடயங்களை கையாளுவதற்கு விவசாய சங்கங்களும் முன்வருவதில்லை.

எமது உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான அனைத்து சந்தைகளிலும் பேரம்பேசலுக்குரிய அதாவது ஏலம் கூறலுக்கான இடம் எந்த விதமான கட்டணங்களும் இன்றி இலவசமாக வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அது மட்டுமன்றி அதற்கான தராசு, பற்றுச்சீட்டிடக்கூடிய கருவிகள், ஏனைய காகிதாதிகள் என்பவற்றை இலவசமாக வழங்குவதற்கும் தயாராக இருக்கின்றோம்.

இந்த விவசாய சம்மேளனங்கள் அல்லது விவசாய சங்கங்கள், தன்னிச்சையாக ஒரு சில வியாபாரிகளுக்கு வழக்கமாக எந்தவொரு பேரம் பேசலும் இன்றி மரக்கறிகளை கொடுப்பதனை தவிர்த்து, தங்களுடைய விவசாயிகளை ஒற்றுமைப்படுத்தி தங்களுடைய சங்க உறுப்பினர்கள் ஊடாக அவர்களுக்கு விழிப்புணர்வூட்டி அனைத்து மரக்கறிகளையும் பொதுவான ஏலம் கூறும் இடத்துக்கு கொண்டு வந்து ஏலம் கூறுகின்ற இறுக்கமான நடைமுறையைப் பின்பற்றினால், விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான கழிவுப் பிரச்சினை தானாகத் தீர்ந்து விடும்.

விவசாய சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள் முன்வந்து விவசாயிகளை ஒற்றுமைப்படுத்தி ஒருமுகமாக நியாயமான விலையைத் தீர்மானித்து எந்தக் கழிவுகளும் அறவிடாது விவசாயிகளிடமிருந்து பொருட்களை வர்த்தகர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு முன்வருவதே, இவ் விடயத்தில் நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய தீர்வாக இருக்கும் என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை கவனத்திலெடுத்து சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடன் வடக்கு மாகாண ஆளுநர் கலந்துரையாடல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

### மனுஷ இன்று சி.ஐ.டி. க்கு...

முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அவரின் சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் இதனை நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரி, நீதிமன்றத்தின் முன்னிலையில் கருத்து முன்வைத்து கடந்த நவம்பர் மாதம் 21ஆம் திகதி வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவரினால் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பிரதி பொலிஸ் மா அதிபருக்கு முன்வைக்கப்பட்ட எழுத்துபூர்வமான முறைப்பாட்டுக்கமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரையில் 35 வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### புதிய கூட்டணிக்கு ஐ.தே.க...

இதேவேளை, தேசியப் பட்டியலில் ரவி கருணாநாயக்க பாராளுமன்றத்துக்கு தெரிவானது தொடர்பிலும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் கட்சி உறுப்பினர்கள் நேற்றைய செயற்குழுவில் கருத்து முன்வைத்துள்ளார்கள்.

### நெல்லின் விலையில்...

நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் யூ.கே.செமசிங்க தெரிவித்துள்ளார்.

நூற்றுக்கு 30 சதவீத மின் கட்டணக் குறைப்பு என்பது பாரிய கட்டணக் குறைப்பாக அமையும். ஒரு கிலோ நாட்டரிசிக்காக 230 ரூபா நிர்ணய விலை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் என்ற அடிப்படையில் அடுத்த வாரத்திலிருந்து 230 ரூபாவுக்கும் குறைவான விலையில் அரிசியை சந்தைக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க எதிர்பார்த்துள்ளோம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் கொழும்பில் நேற்று (20) அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது ஈரப்பதன் கொண்ட ஒரு கிலோ நெல் 110 – 115 ரூபா வரையில் குறைவடைந்துள்ளது. எனவே, அடுத்த வாரத்தில் 100 – 110 ரூபாவுக்கு இடையில் ஒரு கிலோ நெல்லுக்கான விலை குறைவடையுமென்று எதிர்பார்க்கிறோம்.

அவ்வாறே அடுத்தவாரத்தில் அரசாங்கத்திடமிருந்து ஈரப்பதன் கொண்ட ஒரு கிலோ நெல்லை 100 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய எதிர்பார்க்கிறோம்.

எனவே, 115 – 120 ரூபாவுக்கு இடையில் ஒரு கிலோ நெல்லுக்கான விலையை வர்த்தமானியில் அறிவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கிறோம். அதற்கமைய, சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் என்ற அடிப்படையில் நெல்லை கொள்வனவு செய்ய எதிர்பார்க்கிறோம் என்றார்.

### பிளவுபடுத்தும்...

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

கூட்டுறவு சமாச தேர்தல்களில் எந்தவொரு தனிக்கட்சியும் தனித்து வெற்றியடைவதாக நான் கருதவில்லை. சகல கட்சிகளும் ஒன்றிணைந்தே இந்தத் தேர்தலில் போட்டியிட்டு வருகின்றன. ஒருவேளை ஐக்கிய மக்கள் சக்திக்கு அது சாதகமாக இருக்குமாக இருந்தால் அது சிறந்த யோசனையாகவே இருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இணைவுக்காக பேச்சுவார்த்தை பதவிகளை அடிப்படையாக கொண்டதல்ல. சகலரினதும் இணக்கப்பாட்டுக்கமையவே இந்த பேச்சுவார்த்தைக்கான அனுமதியை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொடுத்தார்.

இரு தரப்பையும் இணைப்பதற்கே நாங்கள் முயற்சிக்கிறோமே தவிர, இருத்தரப்பை பிளவடைய செய்ய முயற்சிக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியும் எங்களுக்கு மிகவும் அவசியமாகும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

### பிரமிட் முறையூடாக...

1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83 (இ) பிரிவில் தடை செய்யப்பட்ட திட்டமொன்றில் ஈடுபட்டுள்ளமை மத்திய வங்கி நடத்திய விசாரணைகளில் உறுதிப்படுத் தப்பட்டுள்ளதாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, டீன்ஸ் லங்கா ஹெல்த் கெயார் தனியார் நிறுவனம், பெஸ்ட் லைப் இன்டர்நெஷனல் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம், மார்க் - வோ இன்டர்நெஷனல் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம், வி.எம்.எல். இன்டர்நெஷனல் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம், பாஸ்ட-3-சைக்கிள் இன்டர்நெஷனல் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம், ஸ்போர் சைன் எப், ஸ்போர்ட் சைன் இஸட்.எஸ். சொசைட்டி ஸ்ரீ லங்கா, ஒன்மெக்ஸ் டீ.டி., எம்.டி.எப்.ஈ.எப், எம்.டி.எப்.ஈ. (எஸ்.எல்.) குரூப், எம்.டி.எப்.ஈ. சக்ஸஸ் லங்கா, எம்.டி.எப்.ஈ. (டீ.எஸ்.சி.சி.) குரூப், பாஸ்ட் வின் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஆகிய இவ்வாறு பிரமிட் முறையில் நிதி மோசடி செய்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், ப்ரூகோ ஒன்லைன் எப்ஃ ப்ரூகோ ஒன்லைன் தனியார் நிறுவனம், ரைட் டு திரி பிரிடம் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம், கியூ நெட், எரா மிராக்கல் தனியார் நிறுவனம் மற்றும் ஜனசிஸ் பிசினஸ் ஸ்கூல், லெட்ஜர் பிலொக், இசிமக இன்டர்நெஷனல் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம், பீ கொய்ன் எப் மற்றும் சன்பேர்ட் பௌண்டேஷன், வின்டெக்ஸ் ட்ரெடிங், த என்ரிச் லைப் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம், ஸ்மார்ட் வின் என்டபிரனர் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம், நெட் போர் இன்டர்நெஷனல் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்/ நெட்ரிக்ஸ் ஆகிய நிறுவனங்களும் இவ்வாறு பிரமிட் முறையினூடாக நிதி மோசடி செய்வதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

### ரயில் போக்குவரத்தை...

இவர் ஊடகங்களுக்கு அறிவிக்காது, ரயில் பயணத்தின்போது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கண்காணிக்க நேரடி கள ஆய்வை முன்னெடுத்துள்ளார்.

இதன்போது, அடிக்கடி இடம்பெறும் ரயில் தாமதங்கள், மின் விசிறிகள் பழுது, ரயில்களில் ஏறுவதில் மாற்றுத் திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்கள், தண்டவாளங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் சுகாதாரக்கேடு, பாதுகாப்பற்ற சேதமடைந்த ரயிலை தொடர்ந்து பயன்படுத்தல் போன்ற பிரச்சினைகளை பொதுமக்களிடம் இருந்து அமைச்சர் கேட்டறிந்துள்ளார்.

### எங்களின் திட்டங்களை...

மீதமுள்ள 61 எண்ணெய் குதங்களை இந்தியா மற்றும் இலங்கை ஒன்றிணைந்த வேலைத்திட்டமாக அபிவிருத்தி செய்யவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் நேற்று முன்தினம் கட்டுகுருந்த பிரதேசத்தில் ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

இந்த விடயத்தில் புதிதாக செய்வதற்கு ஜனாதிபதிக்கு எதுவும் இல்லை. மூன்று வருடங்களுக்கு முன்னர் அதனை நாங்கள் செய்து நிறைவு செய்துவிட்டோம். நான் 2020ஆம் ஆண்டு எரிசக்தி அமைச்சை பொறுப்பேற்றுக்கொண்டபோது இந்த 99 எண்ணெய் குதங்களும் 2002ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

எல்.ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருள் களஞ்சியத்துக்காக பயன்படுத்தும் 14 எண்ணெய்க் குதங்களும் பிரீமா நிறுவனம் நீர் களஞ்சியத்துக்காக பயன்படுத்தும் இரு குதங்கள் தவிர ஏனைய 83 குதங்களும் இரண்டாம் உலகப் போர் காலப்பகுதியிலிருந்து 75 வருடங்களாக துருப்பிடித்தே இருந்தன.

எல்.ஐ.ஓ.சி. நிறுவனம் பயன்படுத்திய 14 குதங்களை அவ்வாறே அவர்களுக்கு கொடுத்துவிட்டு மீதமுள்ள சகல குதங்களையும் மீண்டும் நாட்டுக்கு பொறுப்பேற்றுக்கொள்ள நாங்கள் நடவடிக்கை எடுத்திருந்தோம். 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ஆம் திகதியே இதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தோம். எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் தேவைக்காக ஒதுக்கப்பட்டிருந்த 24 குதங்களில் ஐந்து தாங்கிகளை புனரமைப்பதற்கான பணிகளை ஆரம்பித்திருந்தோம்.

2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மீதமிருந்த 65 தாங்கிகளை இந்தியா மற்றும் இலங்கை இணைந்து கப்பல் போக்குவரத்துக்கு அவசியமான கப்பலுக்கான எரிபொருளை களஞ்சியப்படுத்தவும் சர்வதேச எரிபொருள் சந்தைக்கு அவசியமான எரிபொருளை களஞ்சியப்படுத்துவதற்கான அவசியத்துக்கேற்ப அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் பெரும் பகுதியையும் எல்.ஐ.ஓ.சி. நிறுவனத்துக்கு மிகுதி 49 வீதம் கிடைக்கும் வகையிலும் திருமலை எரிபொருள் முனையம் என்ற பெயரில் வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருந்தோம்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் நாங்கள் நிறைவு செய்த வேலைத்திட்டத்தையே ஜனாதிபதி நேற்று முன்தினம் புதிய வேலைத்திட்டமாக அறிவித்திருந்தார்.

பொய் கூறி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், பொய்யாக ஆட்சியை முன்னெடுக்கவே முயற்சிக்கிறது. காஞ்சனவினால் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களை தமதாக்கிக் கொள்ள அரசாங்கம் முயற்சிப்பது மாத்திரமல்லாமல் ஜனக்க வக்கும்புரவினால் இலாபமடையச் செய்த ஹிங்குராணை சீனி தொழிற்சாலையை தமதாக்கிக் கொள்ளவும் அரசாங்கம் முயற்சித்து வருகிறது. அப்படியானதொரு முயற்சியையே திருமலை எண்ணெய்த் தாங்கிகள் விவகாரத்திலும் ஜனாதிபதி செய்து வருகிறார். அதனூடாக மக்களை ஏமாற்றவும் முயற்சிக்கிறார்.

மற்றையவர்களின் குழந்தைகளுக்கு போலி பிறப்புச் சான்றிதழை தயாரிப்பதற்கு பதிலாக தனக்கென குழந்தையொன்றை வளர்ப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயற்சிக்கவேண்டும். அதாவது, எங்களின் வேலைத்திட்டங்களை மெருகூட்டுவதை விடுத்து அவர்களுக்கென தனித்துவமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

2002ஆம் ஆண்டு இந்தியாவுக்கு பொறுப்பளிக்கப்பட்டு 75 வருடங்களுக்கு மேல் துருப்பிடித்துக்கொண்டிருந்த இந்த எண்ணெய்த் தாங்கிகளை இலங்கைக்கு மீண்டும் பெற்றுக்கொள்ள இந்தியாவுடன் போராடிக்கொண்டிருந்தபோது அதற்கெதிராக தேசிய மக்கள் சக்தியினால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புப் போராட்டங்கள் எனக்கு பெரும் சவாலாக அமைந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

### பொலிஸ் ஆணைக்குழு...

சூழ்ச்சிகளால் நாங்கள் இந்த அரசாங்கத்தை உருவாக்கவில்லை. உயர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் போன்று நாட்டில் இரத்த ஆற்றை பெருகச் செய்யும் சூழ்ச்சியினாலோ, வெளிநாடுகளின் தலையீட்டினாலோ, ஊடக பலத்தினாலோ இந்த அரசாங்கம் கட்டியெழுப்பப்படவில்லை. இலட்சக் கணக்கான மக்களின் அச்சுறுத்தல் மற்றும் தலையீட்டினாலேயே அரசாங்கத்தை தோற்றுவித்தோம்.

இலங்கையில் பழைமையான இழிவான அரசியல் கலாசாரம் மீண்டும் தோற்றம்பெறாது. அந்த கலாசாரத்தை நிறைவுக்கு கொண்டுவந்துள்ளோம். மக்கள் வாக்களித்தார்கள் என்றால் அந்த மக்களிடம் செல்வதற்கு எதற்காக பொலிஸ் பாதுகாப்பு. அதனால் மக்கள் பிரதிநிதிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு அவசியமில்லை. இன்றையளவில் பொலிஸ் திணைக்களத்தில் 21,000 பொலிஸ் அதிகாரிகளுக்கான பற்றாக்குறை நிலவுகிறது. எதிர்வரும் வரவு - செலவுத்திட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான பொலிஸ் அதிகாரிகளை இணைத்துக்கொள்வதற்கு யோசனை முன்வைப்போம்.

பொலிஸ் அதிகாரிகளுக்கென பெரும் பொறுப்பு இருக்கிறது. ஆனால், பொலிஸ் அதிகாரிகளின் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் அமைச்சர்களின் வீடுகளிலும் அமைச்சர்களின் பின்னாலுமே கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தார்கள். இந்த முறையை மாற்றியமைத்தே ஆகவேண்டும். அதனால் அந்தக் கலாசாரத்தை இன்று மாற்றியமைத்துள்ளோம்.

அமைச்சர்களுக்கு வழங்கும் வீடுகளின் மின்கட்டணம், நீர்க் கட்டணம் என்பவற்றை அரசாங்கமே செலுத்தியது. இலட்சக்கணக்கில் கட்டணம் செலுத்த நேர்ந்தது. அதனாலேயே அந்தக் கலாசாரத்தை மாற்றியமைத்துள்ளோம். குடும்பத்தை பின்னணியாக கொண்ட அரச நிர்வாகத்தை முறியடித்துள்ளோம். இன்னும் மேலும் பல விடயங்களை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. பாராளுமன்றத்தில் உணவு நேரத்தின் செலவுக்கு அமைய மேற்கொள்ளப்படும் செலவுக்கமைய அதற்கான கட்டணத்தை செலுத்த வேண்டும் என்று புதிய தீர்மானம்போன்ற சிறிய சிறிய விடயங்களை கொண்டுவருவோம்.

அதேபோன்று, புதிய சட்டத்தை உருவாக்கி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவை இரத்துச் செய்வோம். முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புப் பணிகளுக்காக ஒருவருக்கு மாத்திரம் 70 – 80 கோடி ரூபா செலவளிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே பாதுகாப்பு அதிகாரிகளை 60 வரையில் குறைத்துள்ளோம்.

பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த சர்வதேசத்தின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். வரலாற்று ரீதியில் நீண்டகாலம் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பை பேணி வந்துள்ளோம். இந்தியாவை ஓரங்கட்டிவிட்டு அபிவிருத்தியை நோக்கி எம்மால் பயணிக்க முடியாது. அதன் காரணமாகவே முதலாவது இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டோம். அதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசித்தோம். பல்வேறு இணக்கப்பாடுகளையும் மேற்கொண்டோம்.

சகல விடயங்களையும் மக்கள் வரவேற்கிறார்கள். ஆனால், திருடர்களுக்கு எதிராக எவ்வித நடைமுறையும் இல்லையா என்று வினவுகிறார்கள். காதைப் பிடித்து சிறையிலடைக்க முடியுமென்றால் அநேகமானவர்கள் இந்நேரம் சிறையிலடைக்கப் பட்டிருப்பார்கள். இருந்தபோதும் அவ்வாறு அரசாங்கத்தை முன்னெடுக்க முடியாது. முறையாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

அந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இருக்கிறது. பொலிஸ் திணைக்களம் இருக்கிறது. இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு இருக்கிறது. கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக நியமனம்பெற்றபோது 600 குற்றப் புலனாய்வு அதிகாரிகளை ஒரே நேரத்தில் நீக்கினார்கள். பழைய விசாரணைகள், விடயங்களை அறிந்து வைத்திருந்த அதிகாரிகள் இல்லாமல் போனார்கள். அதன் காரணமாக பழைய விசாரணைகள் தொடர்பில் அறிந்து வைத்துள்ள அனுபவம் கொண்ட அதிகாரிகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு நியமிக்க கடந்த இரு மாதங்கள் தேவைப்பட்டன. அதற்கான பணிகளை முன்னெடுத்துள்ளோம்.

நேற்றைய கடிதத்திற்கு இன்று நியமனங்களை வழங்க முடியாது. அதற்கு சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதி அவசியமாகும். அவர்கள் சற்று தயக்கம் காட்டுவார்கள். இன்னும் பொலிஸ் ஆணைக்குழு தயக்கம் காட்டிகொண்டே இருக்கிறது. நாங்கள் யாரையும் பாதுகாப்பதற்காகவும் சட்டத்தை மீறுவதற்காகவும் இடமாற்றங்களுக்காகவும் பொலிஸ் ஆணைக்குழுவிடம் அனுமதி கோரவில்லை.

பொலிஸாரின் சாதாரண நடவடிக்கைகளுக்கான மாற்றங்களை வழங்குமாறே பொலிஸ் திணைக்களத்திடம் அனுமதி கோரியுள்ளோம். சில வேளைகளில் அவர்கள் அதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். அதனால் நானும் ஆணைக்குழு தொடர்பில் தயக்கம் காட்டிகொண்டே இருக்கிறேன். அதனால், குற்றப்புலனாய்வு திணைக்கள நியமனங்களுக்கு காலம் தேவைப்பட்டது. இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு பணிப்பாளர் நியமனத்தை நியமிக்க வேண்டியுள்ளது. அந்த நியமனத்துக்கான பணிகளையும் நிறைவு செய்துள்ளோம். சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை முன்னெடுக்கிறது. இந்த விடயங்களை முறையாக முன்னெடுக்க வேண்டும் என்றார்.

## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் தை மாதம் 08ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்** விஷேட விருந்துபசாரத்தில் கலந்து கொள்வீர்கள். மனைவியால் அதிக நன்மைகளைப் பெறுவீர்கள். காதல் நிறைவேறும்.

**ரிஷபம்** புது நண்பர்கள் அறிமுகமாவார்கள். பகைவர்கள் விலகிச்செல்வார்கள். தற்காலிக தொழில், வியாபார இலாபங்கள் உண்டு.

**மிதுனம்** பயணங்களில் இடையூறு ஏற்படும். உடல் நோய்களை அசட்டைச் செய்யாதீர்கள். வீண் டென்ஷன் வேண்டாம்.

**கடகம்** யாரையும் நம்பமுடியாமல் தவிப்பீர்கள். எதிர்கால வாழ்வுக்கு திட்டமொன்றை தீட்டுவீர்கள். மனப்போராட்டம் இருக்கும்.

**சிம்மம்** இன்ப அனுபவங்களால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும். தொழில் சிறப்புகள் உண்டு.

**கன்னி** பணம், பொருள் விரயமாவதை எண்ணி கவலையடைவீர்கள். நினைத்த காரியங்கள் சற்றுத் தாமதமாகி நடக்கும்.

**துலாம்** மனதில் ஒருவித படபடப்புத் தன்மை இருக்கும். வீண் வம்புச் சண்டையை விலை கொடுத்து வாங்காதீர்கள்.

**விருச்சிகம்** வீண் பணவிரயமும் மருத்துவச் செலவுகளும் ஏற்படும். கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. நல்லதையே நினையுங்கள்.

**தனுசு** தொழில், வியாபார இலாபம், எதிர்ப்பார்த்திருந்த வெளிநாட்டுப் பயணம் அமையும். திடீர் தன இலாபங்கள் உண்டு.

**மகரம்** நண்பரிடம் கேட்ட உதவி திடீரென கிடைக்கும்.தொழில் முயற்சிகள் கைகூடும். புகழ், செல்லாக்கு உண்டு.

**கும்பம்** வீண் மனப்பயத்தால் உடல் நோய்கள் ஏற்படும். மறைமுக விரோதிகளின் தொல்லை. உடலைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

**மீனம்** தொழில் விடயத்தில் கவனமாக இருக்காவிட்டால் வீண் பழி வரலாம். உடல் நோய்கள் கவனம். செலவுகள் உண்டு.

**திதி:**சப்தமி பி.ப.12.40 வரை பின் அட்டமி
**நட்சத்திரம்:**சித்திரை மு.இ.11.36 வரை பின் சுவாதி
**பிறை:**தேய்பிறை
**யோகம்:**மரண யோகம் மு.இ.11.36 வரை பின் சித்த யோகம்
**வார சூலை:**வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:**காலை- 8.27 – 9.27 மணி வரை பகல்- 12.27 – 1.27 மணி வரை
**ராகு காலம்:**3.27 – 4.57 மணி வரை
**எமகண்டம் :**9.27 – 10.57 மணி வரை
**குளிகை :**12.27 – 1.57 மணி வரை
**சந்திராஷ்டமம்:**கும்ப-மீன ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் (முற்பகல் 10.03 வரை கும்ப ராசியினருக்கு)

**அதிஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முற்னிரவு 11.36 மணி வரை**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி

**இன்று முற்னிரவு 11.36 மணிக்கு மேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், போட்டி, டீதர்வுகளில் வெற்றி, தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# உயிரைக் காக்க போராடிய செயற்பாட்டாளரிடம் ஐந்து மணிநேரம் சி.ஐ.டி. விசாரணை

(எஸ். பார்த்திபன் )

முல்லைத்தீவு விமானப்படைத் தளத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மியன்மார் போரிலிருந்து தப்பி வந்த சிறுவர்கள் உள்ளிட்ட ரோஹிங்யாக்களை திருப்பியனுப்பக் கூடாதென வலியுறுத்தி முல்லைத்தீவில் போராட்டத்தை முன்னெடுத்த செயற்பாட்டாளரிடம், "ரோஹிங்யாக்களை இலங்கைக்கு வர ஊக்குவிப்பார்களா?" எனக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கேள்வியெழுப்பியுள்ளது. இதன்போது வெகுஜன மக்கள் போராட்டம் குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, பழைய பொலிஸ் தலைமையகக் கட்டிடத்தில் அமைந்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவின் மனிதக் கடத்தல் வியாபாரம் குறித்த விசாரணைப் பிரிவின் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரியிடம் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்ட வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் இணை ஒருங்கிணைப்பாளர் யாட்சன் பிகிராடோவிடம் சுமார் ஐந்து மணிநேரம் விசாரணை நடத்தப் பட்டுள்ளது. பொலிஸாரின் கேள்விக்குப் பதிலளித்த யாட்சன் பிகிராடோ, அத்தகைய ஊக்குவிப்பை தான் செய்யப்போவதில்லையென வெளிப்படையாக அறிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

"ரோஹிங்யா மக்களின் வருகையை நீங்கள் ஊக்குவிக்கின்றீர்களா எனக் கேட்டார்கள். நாங்கள் எங்களுடைய அறிக்கையில் பொதுவெளியில் சொல்லியிருக்கின்றோம், அகதிகளாக இங்கு வந்திருப்பவர்களை இங்கே தொடர்ந்து இருப்பதற்கோ அல்லது தொடர்ந்து இங்கு வருவதற்கோ நாங்கள் எப்போதும் ஊக்குவிக்கவில்லை. ஆனால், இருப்பவர்களை - வந்திருப்பவர்களை மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச நியமங்களுக்கமைவாக ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து ஏற்றுக்கொள்ளக்கூடிய நாடுகளுக்கு அவர்களை அனுப்பிவைப்பது பொருத்தமாக அமையும். சர்வதேச சட்ட நியமங்களையும் பின்பற்றக்கூடியதாக இருக்கும் என்பதை வலியுறுத்தி என்னுடைய வாக்குமூலத்தை வழங்கியிருந்தேன்."

முல்லைத்தீவு விமானப்படை முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட ரோஹிங்யாக்களுக்கு என்ன வகையான உதவிகள் வழங்கப்பட்டன? எனக் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

"எவ்வாறான உதவிகள்? நாங்கள் பெரிதாக உதவிகள் எதுவும் வழங்கவில்லை. ஆனால், மனிதாபிமான அடிப்படையில் நாங்கள் எங்கள் கருத்துகளை வெளியிட்டோம். எங்களால் இயன்ற சிறு சிறு உதவிகளை நாங்கள் அவர்களுக்கு முன்னெடுத்திருக்கின்றோம்" என அவர் கூறியுள்ளார்.

முல்லைத்தீவு விமானப்படை முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ரோஹிங்யாக்கள் குழுவை நாடு கடத்தக் கூடாது எனக் கோரி கடந்த ஜனவரி 09ஆம் திகதி போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கொழும்பிலிருந்து முல்லைத்தீவு சென்ற பிரபல மனித உரிமைச் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோவும் கலந்துகொண்டார்.

மியன்மாரிலிருந்து தப்பி வந்த ரோஹிங்யாக்களை நாட்டுக்குத் திருப்பியனுப்பக் கூடாது எனக் கோரி சிவில் செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் பலர் அடங்கிய குழுவினர் 2025 ஜனவரி 10 வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை தாங்கிய நவ சமசமாஜக் கட்சியுடன் இணைந்த காணாமல்போனோர் தொடர்பான விசாரணைக் குழு ஜனாதிபதி செயலகத்தில் கடிதமொன்றையும் கையளித்திருந்தது.

ரோஹிங்யாக்களை நாட்டுக்குத் திருப்பி அனுப்பக் கூடாது எனக் கோரி பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தன்னை மாத்திரம் விசாரணைக்கு அழைத்தமைக்கான காரணம் தொடர்பில் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியதாக யாட்சன் பிகிராடோ கொழும்பில் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

"பல்வேறு நபர்கள் வந்து இது தொடர்பில் ஆர்ப்பாட்டங்களை செய்துள்ளனர். அவர்களுக்கு ஏன் அழைப்பாணை வரவில்லை. முல்லைத்தீவில் இடம்பெற்ற போராட்டத்தில் நானும் இருந்தேன். ஆகவே, எனக்கு மாத்திரம் வந்தது தொடர்பில் அவர்களிடம் கேள்வி எழுப்பினேன். ஏன் மற்றவர்களுக்கு வரவில்லை? எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் கருத்து வெளியிட்டார், கொழும்பில் போராட்டம் செய்திருக்கின்றார்கள்."

அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகத்தினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்பிலேயே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அவரிடம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சிவில் சமூகத்தை விசாரணைக்கு உட்படுத்துவது மோசமான போக்கு என வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் இணை ஒருங்கிணைப்பாளர் யாட்சன் பிகிராடோ ஊடகவியலாளர்களிடம் சுட்டிக்காட்டுகின்றார்.

"சிவில் சமூகங்களை விசாரிப்பது இன்று நேற்றல்ல. இலங்கையில் ஒரு தொடர் விடயமாகவே இருக்கிறது. இந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி, முன்னைய அரசாங்கமாக இருந்தாலும் சரி, சிவில் சமூகம் என்று சொன்னால் விசாரிப்பது, அவர்களின் பணியை முடக்குவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. என்னை அழைத்ததையும் நான் ஊக்குவிக்கவில்லை. இது பொருத்தமற்ற செயல். குற்றம் ஏதும் செய்யாமல் என்னை ஏன் அழைத்தார்கள் எனக் கேள்வி எழுப்பினேன். சிவில் சமூக பணிகளை அழைப்பது பொருத்தமற்ற செயல்."

எதிர்வரும் நாட்களில் மியன்மாரிலிருந்து சுமார் ஒரு இலட்சம் சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் இலங்கைக்கு வரவுள்ளதாக அமைச்சர் ஆனந்த விஜேபால அண்மையில் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தபோதிலும், இதுவரை ஒரு அகதி கூட இலங்கைக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் பவளவிழாவுக்கு யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு!

(பு.கஜிந்தன்)

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் 75ஆவது வருட நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 26ஆம் திகதி பவளவிழா மாநாடும் புத்தக வெளியீடும் பிரமாண்டமான வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் குறித்த நிகழ்வின் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று (20) ஊடக சந்திப்பை முன்னெடுத்த குறித்த ஏற்பாட்டுக் குழுவினர் மேலும் கூறுகையில், 1949ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையானது பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டு பல சமூக பணிகளை - குறிப்பாக, வறிய மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை




ஊக்குவித்து வந்துள்ளது. இதனால் பலன் பெற்ற பல நூறு பேர் உள்ளனர்.

இந்நிலையில் இந்த மகாசபையானது 75ஆவது வருட நிறைவை எட்டியுள்ளது. அதனடிப்படையில் வள்ளுவரின் வரலாற்றை வாழும் சந்ததியூடாக வரும் சந்ததிக்கு கடத்திச் செல்வதற்காக இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் அரசியல் தலைவர்கள், உயர் பதவிநிலை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, யாழ்ப்பாணத்தின் கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் வகையில் இந்திய அரசின் நிதியுதவியில் கட்டப்பட்ட யாழ்ப்பாணம் மத்திய கலாசார நிலையம் இந்திய அரசின் வள்ளுவர் புகழை உலகெங்கும் பரப்பும் முயற்சியின்கீழ் திருவள்ளுவர் கலாசார நிலையமாக மாற்றப்பட்டுள்ள நிலையில் இந்தியாவின் குடியரசு தினமான 26ஆம் திகதி குறித்த நிகழ்வு நடைபெறவுள்ளமை பலரதும் பார்வையை ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போலி கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்திய ஆப்கானிஸ்தான் பிரஜைகள் இருவர் கைது

போலி கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி இலங்கைக்கு வருகை தந்த ஆப்கானிஸ்தான் பிரஜைகள் இருவர் கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று திங்கட்கிழமை (20) அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் 21 மற்றும் 23 வயதுடைய ஆப்கானிஸ்தான் பிரஜைகளாவர்.

சந்தேக நபர்கள் இருவரும் நேற்று குவைத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

பின்னர், சந்தேக நபர்கள் இருவரும் தங்களது கஸகஸ்தான் கடவுச்சீட்டுகள் மற்றும் பிற ஆவணங்களைக் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இருவரும் சமர்ப்பித்த கடவுச்சீட்டுகள் குறித்து சந்தேகமடைந்த குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் கடவுச்சீட்டுகளைச் சோதனையிட்டுள்ளனர். இதன்போது, இந்த கடவுச்சீட்டுகள் போலியாகத் தயாரிக்கப்பட்டதென உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பின்னர், மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்களின் பயணப்பொதிகளிலிருந்து ஆப்கானிஸ்தான் கடவுச்சீட்டுகள் இரண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் இருவரும் சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருப்பதற்கு முயன்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் குவைத்துக்கு திருப்பி அனுப்பிவைக்க குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஜனவரி, 21ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# நிழல் பாராளுமன்றம்!

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நிழல் (மாற்று) பாராளுமன்றத்தை நிறுவுவதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெளிவந்துள்ள செய்தி எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்காணித்து அதற்கேற்ப மாற்று நடவடிக்கைகளை எடுக்கும் நோக்கில் இந்த நிழல் பாராளுமன்றம், முன்னாள் ஜனாதிபதி ரணிலின் ஆலோசனையின் பேரில் அமையவுள்ளது. இதற்கான கட்டிடம் மற்றும் நிதி வசதிகளை வழங்க சில தனவந்தர்கள் முன்வந்திருப்பதாக அறியமுடிகின்றது.

ஏற்கனவே பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி தற்போது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தாத பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் இந்த மாற்று பாராளுமன்றத்தில் சேர்க்கப்படவுள்ளனர். அண்ணளவாக 450 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் இதற்காகத் தகுதிபெற்றுள்ளனர். ஆனால், அவர்களில் 225 பேர் மட்டுமே மாற்று பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மாற்று பாராளுமன்றமும் மாதத்தின் 8 நாட்கள் கூடும். அரசாங்கத்தில் உள்ள அமைச்சுகளின் எண்ணிக்கைக்கு சமமான அமைச்சர்களைக் கொண்ட நிழல் அமைச்சரவையும் மாற்று பாராளுமன்றத்தில் மூத்த உறுப்பினர்களுடன் நியமிக்கப்படும். அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்படும் அமைச்சுகளின் செயற்பாடுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மாற்று பாராளுமன்றத்தின் சபாநாயகர், அவைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவராக சில மூத்த எம்.பிக்களை நியமிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, தற்போது பாராளுமன்றத்தில் செயற்பட்டுவரும் பொது நிறுவனங்கள் குழு (COPE) மற்றும் கணக்குகள் குழு (COPA) உள்ளிட்ட பல குழுக்களும் இந்த நிழல் பாராளுமன்றத்தில் நிறுவப்படுவதாக அறியப்படுகிறது.

இந்த மாற்று பாராளுமன்றத்துக்கு முன்னாள் ஜனாதிபதிகளும் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்படுவார்கள் . உலகெங்கிலுமுள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மூத்த அரச தலைவர்களும் இலங்கையின் அந்த மாற்று பாராளுமன்றத்தில் உரையாற்ற வாய்ப்பு வழங்கப்படுமென்றும் மேலும் அறியப்படுகிறது.

நிழல் அமைச்சரவை (Shadow Cabinet) என்பது பிரிட்டனிலும் ஆங்கிலப் பாராளுமன்ற முறையை (வெஸ்ட்மின்ஸ்டர் முறை) பின்பற்றும் நாடுகளிலும் உள்ள ஒரு ஜனநாயக அமைப்பான இது ஆளும்கட்சி அமைச்சர்களுக்கு நிகராக எதிர்க்கட்சியினர் அமைக்கும் அமைச்சரவை ஆகும்.

அவுஸ்திரேலியத் தொழிலாளர் கட்சியில் நிழல் அமைச்சர்கள் கட்சி உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படும் நடைமுறை உள்ளது. மற்றப்படி நிழல் அமைச்சரவை எதிர்க்கட்சித் தலைவரால் அமைக்கப்படுகிறது.

நிழல் அமைச்சரவையினர் ஆளுங்கட்சி அமைச்சரவையை ஆக்கபூர்வமாய் இடித்துக் கூறுதலையும் தவறு செய்யும் போது சுட்டிக்காட்டுதலையும் செய்வர். இலங்கை ஆங்கிலேயப் பாராளுமன்ற முறையைப் பின்பற்றினாலும் நிழல் அமைச்சரவை முறை இங்கு நடைமுறையில் இல்லை.

நிழல் அமைச்சரவை, அரசின் திட்டங்களுக்கு மாற்றான புதிய யோசனைகள், திட்டங்கள் மற்றும் தீர்வுகளை முன்வைக்கிறது. இதன் மூலம், மக்கள் ஒரு விரிவான பார்வையைப் பெற்றுக்கொள்கிறார்கள். அதேசமயம், அரசுக்கும் அவைகளின் மேல் கடுமையான பார்வை உருவாகிறது.

அதுமட்டுமல்லாமல், நிழல் அமைச்சரவை அதாவது, புதிய தலைவர்களை மற்றும் திறமையான அரசியல் தலைவர்களை முன்வைக்க உதவுகிறது. இது அரசியலில் ஸ்திரமான நிலையை உருவாக்குவதற்கான நல்ல வாய்ப்புகளைக் கொடுக்கின்றது. பதவியேற்றுள்ள அரசியல் தலைவர்களின் நடவடிக்கைகள் குறித்த எந்தவொரு தவறுகளையும் மக்கள் அறிவதாகவும் அதற்கான மாற்று யோசனைகள் வழங்கப்படும் நிழல் அமைச்சரவையால் உறுதிசெய்யப்படுகிறது.

நாட்டின் தற்போதைய நிலைமையைப் பொறுத்தவரை மேற்படி நிழல் அமைச்சரவை யோசனை மிகவும் வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும். ஆளுங்கட்சியைப் பொறுத்தவரை அது பல இடங்களில் பல விடயங்களில் சறுக்கிக்கொண்டிருப்பதைக் காண முடிகிறது. போதிய அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகள் இல்லாமையே அதற்கு பிரதான காரணம். அதுமட்டுமல்லாமல், கூடுதலான பாராளுமன்ற அதிகாரமும் அதிகார மமதைக்கு இட்டுச் செல்லலாம். அது எதிர்காலத்தில் ஊழல், மோசடிச் செயற்பாடுகளுக்கும் வழிவகுக்கலாம். எனவே, நிழல் பாராளுமன்றம் என்ற ரணிலின் யோசனை காலத்துக்கேற்ற வரவேற்கப்படக் கூடிய ஒன்றாகும்.

முன்னாள் ஜனாதிபதி ரணிலின் இந்த யோசனையில் இன்னொரு பக்கமும் இருக்கிறது. இந்த நிழல் பாராளுமன்றத்தில் கடந்த ஆட்சியில் இருந்த அரசியல்வாதிகளே நியமனம்பெறவுள்ளனர். அவர்களில் ஊழல் மோசடிகளுக்கு பெயர்பெற்றவர்களும் உள்ளதால் அவர்களை மீண்டும் இவ்வகையான செயற்பாடுகளுக்கு நியமித்தால் அது அர்த்தமற்றதாய்ப் போய்விடும். அப்படியான குற்றச்சாட்டுகள் இல்லாத இளவயது அரசியல் பிரமுகர்களை இந்த நிழல் பாராளுமன்றுக்குள் உள்ளீர்த்தால் அது ஆக்கபூர்வமானதாக அமையலாம்.

நிழல் பாராளுமன்றம் என்பது அந்த ஆட்சியாளர்களைத் திருத்தும் நோக்கத்தைக் கொண்டிருக்கவேண்டும். தவிர, அது ஆட்சியைக் கைப்பற்றுவதாக இருக்கக் கூடாது. ஆட்சியைக் காப்பாற்றும் நோக்கில் அது செயற்படுமாயின் அதற்குள் இருக்கும் அரசியல், மக்கள் நலனுக்கு எந்த வகையிலும் உதவாது என்பதைக் கூறிவைக்க விரும்புகிறோம்.

## இன்றைய நாளில்...

- 1749 – இத்தாலி, வெரோனா நகரில் பிலர்மோனிக்கோ அரங்கு தீக்கிரையானது. இது மீண்டும் 1754இல் மீளக் கட்டப்பட்டது.
- 1774 – முதலாம் அப்துல் ஹமீது உதுமானியப் பேரரசராகவும் இஸ்லாமிய கலீபாவாகவும் நியமிக்கப்பட்டார்.
- 1801 – ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்றம் முதல் தடவையாகக் கூடியது.
- 1919 – புரட்சிகர ஐரிஷ் பாராளுமன்றம் அமைக்கப்பட்டு அயர்லாந்துக் குடியரசு அறிவிக்கப்பட்டது.
- 1924 – சோவியத் தலைவர் விளாடிமிர் லெனின் இறந்தார்.
- 1925 – அல்பேனியா குடியரசாக அறிவிக்கப்பட்டது.
- 1947 – முதலாவது சிங்களத் திரைப்படம் கடவுனு பொரொந்துவ இலங்கையில் திரையிடப்பட்டது.
- 1954 – உலகின் முதலாவது அணுசக்தியாலான நீர்மூழ்கிக் கப்பல், நோட்டிலஸ் , அமெரிக்காவில் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1960 – மேர்க்குரி விண்கலத்தில் சாம் என்ற பெண் செம்முகக் குரங்கு விண்வெளிக்குப் பயணமானது.
- 1960 – தென்னாபிரிக்காவில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 435 தொழிலாளர்கள் உயிருடன் புதையுண்டனர்.
- 1968 – பி-52 ஸ்ராடோபோட்ரெஸ் குண்டுவீச்சு விமானம் ஒன்று அமெரிக்காவின் தூலே வான் தளத்தில் மோதியதில், அப்பகுதி முழுவதும் அணுக் கதிர்வீச்சினால் பாதிப்படைந்தது.
- 1972 – திரிபுரா, மேகாலயா, மணிப்பூர் ஆகியன இந்தியாவின் தனி மாநிலங்களாக்கப்பட்டன.
- 1995 – கொழும்பில் யோசப் வாஸ் அடிகளுக்கு திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அருளாளர் பட்டம் வழங்கினார்.
- 2004 – நாசாவினால் செவ்வாய் கோளுக்கு அனுப்பப்பட்ட ஸ்பிரிட் தளவுலவியின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. எனினும், இது பூமியில் தன்னியக்க முறையில் திருத்தப்பட்டு பெப்ரவரி 6இல் தொடர்புகள் மீண்டும் பெறப்பட்டன.
- 2008 – அலாஸ்காவின் இயாக் மொழி பேசும் கடைசிப் பழங்குடி இறந்தார்.
- 2009 – செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 2009 – காஸாக்கரையில் இருந்து இஸ்ரேல் அதிகாரபூர்வமாக வெளியேறியது.

# எதிர்பார்ப்புகள் - அச்சங்கள்
## அமெரிக்க ஜனாதிபதியாக
# மீண்டும் ட்ரம்ப்



அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது தடவையாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றுள்ளார்.

தொடர்ந்து அல்ல. 2020 தேர்தலில் தோற்று, நான்கு ஆண்டுகள் வெளியே இருந்துவிட்டு இப்போது மீண்டும் அதிகாரத்துக்கு வருகிறார்.

இடைப்பட்ட இந்த நான்கு ஆண்டு காலத்தில் அவர் ஏதும் மாறி யிருக்கிறாரா? அவரது அரசியல், கோட்பாடு, அணுகுமுறை, குணநலன் எதுவும் மாறியிருக்கிறதா...?

அப்படி எதுவும் தென்படவில்லை. அதாவது, மீண்டும் அதே ட்ரம்ப். உலக நாடுகளுக்கு இதுதான் அச்சமூட்டுகிறது; அதே அளவுக்கு எதிர்பார்ப்பையும் உண்டாக்கியிருக்கிறது!

ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிச் செல்லும் ஜோ பைடன், அப்படியொன்றும் பிரமாதமாக எந்தச் சாதனையையும் நிகழ்த்தி விடவில்லை. அவரது சொந்தக் கட்சியே தேர்தலுக்கு சற்று முன்னர் அவரைக் கைவிட்டு, கமலா ஹரிஸை வேட்பாளராக நிறுத்தியது. அந்தளவுக்குத்தான் அவருக்கு மக்கள் ஆதரவு இருந்தது.

இத்தனைக்கும் அவர் சார்ந்த ஜனநாயக கட்சிக்கு டொனால்ட் ட்ரம்பின் குடியரசுக் கட்சியை விடவும் அதிகமான ஆதரவு இருந்தது.

ஒரு கட்டத்தில் உண்மையில் ஜனநாயகக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருமென்று பலரும் நம்பினார்கள். அமெரிக்காவின் முதல் பெண் ஜனாதிபதியாகக் கமலா ஹரிஸ் பொறுப்பேற்பார் என்று பலரும் எழுதத் தொடங்கினார்கள். களநிலைமை அப்படித்தான் இருந்தது. ஆனால், தனது ஆக்ரோஷமான பேச்சு செயற்பாட்டால் வலுவான தலைவர் என்கிற தோற்றத்தை உருவாக்கி வெற்றி கண்டார் டொனால்ட் ட்ரம்ப். இன்று உலக நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கும் அச்சத்துக்கு அடிப்படைக் காரணமே இந்த வலுவான தலைவர் என்கிற தோற்றம்தான்.

2017இல் முதல் தடவையாக ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற போது டொனால்ட் ட்ரம்ப் ஆற்றிய உரை இன்னமும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அமெரிக்கா முதலில் என்ற அவரது முழக்கம், உலகம் முழுவதும் அதிர்வலைகளை உண்டாக்கியது. அவருக்கு முன்னர் எந்த அமெரிக்க ஜனாதிபதியும் இவ்வாறு கூறியதில்லை.

அது என்ன... அமெரிக்கா முதலில்? தனது பேச்சிலேயே ட்ரம்ப் தெளிவாகக் கூறிவிட்டார்.

இதுவரை, பிற நாடுகளுடன் அமெரிக்கா கொண்டிருந்த வர்த்தக உறவால் அந்தந்த நாட்டுக்குத்தான் பெரும் பயன் கிடைத்தது. இத்தகைய வர்த்தக உறவுகளால் அமெரிக்காவுக்கு இழப்புத்தான் ஏற்பட்டதேயன்றி, எந்த இலாபமும் இல்லை. என் நாட்டுக்குப் பயன் விளைவிக்காத வர்த்தக உறவில் இனி ஈடுபடப் போவதில்லை. சர்வதேச வர்த்தகத்தில் எனது அமெரிக்காவின் நலனையே முன்னிறுத்துவேன். எனக்கு எனது நாட்டு நலன்தான் முக்கியம். அதுதான் முதலில். மற்ற நாடுகளுக்கு உதவுவதெல்லாம் இதற்குப் பிறகுதான்.

தான் சொன்னபடியே அமெரிக்க நலனை முன்னிறுத்துவதில் டொனால்ட் ட்ரம்ப் அதிக அக்கறை காட்டினார். இருவருக்கும் சம இலாபம் என்றால் வாருங்கள். இல்லையேல், விலகிச் செல்லுங்கள். எங்களுக்குக் கவலையில்லை. ஒவ்வொரு சபையிலும் - ஒவ்வொரு கூட்டத்திலும் இதனைத் தொடர்ந்து வலியுறுத்தினார்.

ஒருபுறம் அமெரிக்க உதவியைப் பெற்றுக் கொண்டு, மறுபுறம் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒழிக என்று முழக்கமிட்டு உள்நாட்டில் அரசியல் ஆதாயம் தேடிய தலைவர்கள், மூச்சுத்திணறிப் போனார்கள். உலகின் பெரிய, சிறிய நாடுகள் அமெரிக்க உறவு குறித்த தமது போக்கை மாற்றிக்கொள்ள நேரிட்டது.

அமெரிக்கா, சீனாவுடன் வர்த்தக உறவின்றி உலகில் எந்த நாடும் தனித்து பொருளாதார வளர்ச்சி காண முடியாது என்பதுதான் இன்றுள்ள யதார்த்தம். இந்தியா, ஜப்பான், தென்கொரியா, அவுஸ்திரேலியா போன்ற ஒருசில நாடுகள் மட்டுமே தனித்து நிற்கும் வல்லமை கொண்டவை. அங்கு மட்டுமே உள்நாட்டுப் பொருளாதாரம் வலுவாக இருக்கிறது. அதனால், பொருளாதாரத் தன்னிறைவு சாத்தியமாகியுள்ளது.

அது சரி, அவரது நாட்டுக்கு அவர் முன்னுரிமை தருகிறார். இதில் என்ன தவறு இருக்கிறது? நியாயமான கேள்வி. இதுவரை நடந்து வந்துள்ள சர்வதேச வணிகப் பரிமாற்றங்களை சற்று உன்னிப்பாகப் பார்த்தால், உலக நாடுகளுக்கிருக்கும் சங்கடம் தெரிந்து விடும்.

சர்வதேச வர்த்தகமென்றால் ஏற்றுமதி - இறக்குமதி இரண்டும் இருக்குமல்லவா...? பொதுவாக எந்த நாட்டுக்கும் இன்னொரு நாட்டுடன் ஏற்றுமதி- இறக்குமதி இரண்டும் சமமாக இருப்பதில்லை.

ஏற்றுமதி அதிகம் இருந்து இறக்குமதி குறைவாக இருந்தால் அது, அந்த நாட்டுக்கு ஆதாயம். ஆயிரம் ரூபாவுக்கு ஏற்றுமதி, 500 ரூபாவுக்கு இறக்குமதி செய்கிறேன் என்றால் எனக்கு இலாபம் தானே..? பிரதானமாக இங்குதான் அமெரிக்க நலன் பாதிக்கப்படுவதாக டொனால்ட் ட்ரம்ப் கூறுகிறார்.

அதாவது, அமெரிக்காவிலிருந்து சில நாடுகள் செய்யும் இறக்குமதி குறைவு. அங்கிருந்து அமெரிக்காவுக்கு செய்யும் ஏற்றுமதி மிக அதிகம். இதற்குப் பொருள் - அமெரிக்காவால் இந்த நாடுகள் பயன்படுகின்றன.

இது மட்டுமல்ல, கலவரம், தாக்குதல், போர் தொடங்கி இயற்கைப் பேரிடர் வரை ஒவ்வொரு நெருக்கடியின் போதும் உலக நாடுகளுக்கு அமெரிக்கா உதவி வருகிறது. இதனாலெல்லாம் அமெரிக்காவுக்கு இழப்புத்தான் ஏற்படுகிறதே தவிர, ஆதாயம் ஏதும் இல்லையென்பதே டொனால்ட் ட்ரம்பின் மறைமுக வாதம்.

(அது என்ன மனிதாபிமான உதவி என்றால் அமெரிக்கா மட்டுமே நினைவுக்கு வருகிறது?)

உலக நாடுகளின் கவலை என்னவென்று இப்போது புரிந்திருக்குமே... அமெரிக்காவுடன் தமது வணிகம் பாதிப்புக்குள்ளாகும். அமெரிக்க உதவி குறைந்து போகும். அவசர தேவைக்கு உலக வங்கி உலக நிதியம் போன்ற அமைப்புகளிலிருந்து கிடைக்கும் கடன் உதவி தொடர்ந்து கிடைப்பதில் சிக்கல் ஏற்படலாம். வெகு நியாயமான அச்சம். காரணம், இவையெல்லாம் அநேகமாக அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இயங்குபவை.

இப்படிச் சொல்வதால், அமெரிக்காவில் உலக நாடுகளுக்கு நன்மை மட்டுமே உண்டு என்று பொருள் கொள்ளக் கூடாது. ஏகாதிபத்திய செயற்பாடுகளில் அமெரிக்கா - சீனா இடையே எந்த வேறுபாடும் இல்லை.

எந்த ஒரு நாட்டின் மீதும் தனது அதிகார வலிமையைக் காட்ட அமெரிக்காவோ சீனாவோ தயங்கியதே இல்லை. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நிகழ்ந்த, அல்லது நிகழ்ந்து வரும் எந்த ஒரு போருக்குப் பின்னாலும் வல்லரசுகளின் ஆட்டம் உறுதியாக இருக்கவே செய்கிறது. உலகப் பொருளாதாரத்தில் கடுமையான பின்னடைவுகளை ஏற்படுத்தும் இவ்வகைப் போர்களால் சிறிய நாடுகளே மிகவும் மோசமாகப் பாதிப்புக்கு ள்ளாகின்றன. இங்கு வாழும் மக்கள், மென்மேலும் கொடிய வறுமைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

அவருக்கு அதுவரை டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, அமெரிக்காவின் ஏகாதிபத்திய நடவடிக்கைகள் இன்னும் தீவிரமடையலாம். இதற்குத்தான் சாத்தியங்கள் அதிகம். உலக நன்மைக்கு, உலக மக்களின் நலனுக்கு இது நல்லதல்ல.

மேலும் மேலும் பல அரசியல் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தாம் ஆளாகலாம் என்கிற அச்சம் சிறிய நாடுகளில் பரவியிருக்கிறது. இதனை அடிப்படையற்ற அச்சம் என்று ஒதுக்கிவிட முடியாது.

போருக்கு எதிராக, ஆயுதப் பரவலுக்கு எதிராக, ஏகாதிபத்திய அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக டொனால்ட் ட்ரம்ப் இதுவரை குறிப்பிடும்படி எதுவும் பேசவில்லை; செய்யவில்லை. மாறாக, இத்தகைய கொடு செயல்களுக்கு ஆதரவாகவே அவர் இருப்பார் என்றுதான் கருத வேண்டி உள்ளது. இந்த அச்சங்களுக்கெல்லாம் மாறாக, போருக்கு எதிராக மனித குலத்துக்கு நன்மை செய்யும் நடவடிக்கைகளில் டொனால்ட் ட்ரம்ப் ஈடுபட்டால் மிகவும் நல்லது. அப்படி அவர் நடந்து கொள்வாரா? நம்பிக்கை இல்லை; ஆனாலும் பார்ப்போம்.

டொனால்ட் ட்ரம்ப் வருகையால் நன்மை ஏதும் இல்லையா..? நிச்சயமாக சில நன்மைகள் இருக்கத்தான் செய்கின்றன. அடிப்படைவாதம் தீவிரவாதம் பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கைகளில் ஒரு தெளிவும் தெம்பும் இருக்கும். ஆங்காங்கே சிறு குழுக்கள் மூலம் அரசுகளைக் கவிழ்க்க சிலர் மேற்கொள்ளும் முயற்சிகள், ஊக்குவிக்கப்படாது, முறியடிக்கப்படலாம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளைக் கவிழ்ப்பதற்கு ஜனநாயக வழியில் போராடி, அதிகாரத்தைக் கைப்பற்ற நினைக்கும் கும்பல் ஜனநாயகம், அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக சர்வதேச அங்கீகாரம் பெறாமல் போகலாம்.

இது மட்டுமன்றி, டொனால்ட் ட்ரம்பின் வலுவான அரசியல் தலைமை காரணமாக அமெரிக்கப் பொருளாதாரம், சரிவிலிருந்து மீண்டு வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பக் கூடும். இதனால் அங்கே வேலை வாய்ப்புகள் கூடும். பன்னாட்டு இளைஞர்கள் பயன்பெறக் கூடும். இதனால் அந்தந்த நாட்டுப் பொருளாதாரம் நன்மை பெறும்.

இன்னும் இப்படி, பல நல் விளைவுகளை எதிர்பார்க்கலாம்.

ஒன்றுக்கொன்று, சங்கிலித் தொடர் போல, பயன்களும் பாதகங்களும் ஏற்படலாம்.

பங்களாதேஷில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஷேக் ஹசீனாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது தெரியும். அப்போது கல்வியமைச்சராக இருந்தவர் ஒரு பேட்டியில் இவ்வாறு கூறினார் ''பங்களாதேஷின் பொருளாதாரம் சரிவிலிருந்து மீளவேண்டுமானால் டொனால்ட் ட்ரம்புடன் நல்லுறவு இருந்தாக வேண்டும். ஆனால், தற்போதுள்ள பொறுப்பு ஜனாதிபதி வெளிப்படையாக கமலா ஹரிஸுக்கு ஆதரவு தந்து ரொனால்ட் ட்ரம்ப்பைப் பகைத்துக் கொண்டார். இதனை மறந்து பங்களாதேஷுக்கு டிரம்ப் உதவ வேண்டும்.

உலகளாவிய வர்த்தகம், உலகளாவிய அரசியல், உலகளாவிய உறவுகள்/ தொடர்புகள் இன்று இயல்பாகி விட்டன. எனவே, பட்டாம்பூச்சி விளைவு, தவிர்க்க முடியாததாகி விட்டது. அமெரிக்காவில் அதிகார மாற்றம், மற்ற பிற நாடுகளில் ஏதோ ஒரு வகையில் அதிர்வுகளை ஏற்படுத்தவே செய்யும். இவை நல்லதாக இருக்க வேண்டுமென்பதே நமது விருப்பம்.

பார்க்கலாம். ஒருவேளை டொனால்ட் ட்ரம்ப் மாறியுமிருக்கலாம்!

நல்லது நடக்கும் என்கிற நம்பிக்கையில் தானே ஒவ்வொரு நாளையும் நகர்த்திக் கொண்டிருக்கிறோம்......

**- பாஸ்கரன் கிருஷ்ணமூர்த்தி -**

## நக்கல் நமசிவாயம்

அரசாங்க ஆட்களின் பேச்சுக்கு மட்டும் ஒரு குறைச்சலும் இல்லைப் பாருங்கோ..!



# பொதுத் துறைகளில் பெண்கள் ஈடுபடுவதும் ஆண்கள் துணை நிற்பதும் வரவேற்கக்கூடியதே

## கண்டி உதவி இந்தியத் தூதுவர் சரண்யா தெரிவிப்பு







ஜே.எம்.ஹாபீஸ்

பெண்கள் பொதுத் துறைகளில் ஈடுபடுவதும் அதற்கு ஆண்கள் துணை நிற்பதும் வரவேற்கத் தக்க பண்புகளாகுமென கண்டி உதவி இந்தியத் தூதுவர் திருமதி வீ.எஸ்.சரண்யா தெரிவித்தார்.

கண்டி சஹஸ் உயன பூங்காவில் கடந்த சனிக்கிழமை (18) இடம்பெற்ற பொங்கல் தின வைபவமொன்றில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். கண்டி இந்து மகளிர் சங்கம் ஒழுங்குசெய்த இவ்வைபவத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நானும் பொங்கல் தினத்தைக் கொண்டாடும் ஒருவராகும். ஆனால், எனக்கு இம்முறை எனது சொந்த ஊரில் அதனைக் கொண்டாட முடியாமல்போனது. இருப்பினும், அதுபற்றி எந்தக் கவலையும் ஏற்படாது, எனது சொந்த ஊரில் கொண்டாடும் ஒரு நிகழ்வு போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. அதாவது, இந்தியாவில் எமது பிரதேசத்தில் கொண்டாடும் அதே விதமாக இங்கு கொண்டாடப்பட்டமை எனக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.



மேலும், மகளிர் குழுவொன்று ஒழுங்கு செய்தமை எனக்கு இன்னும் மகிழ்ச்சியாக உள்ளது. இப்படியான பொதுப் பணிகளில் மகளிர் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது. அதனை நாம் ஊக்குவித்தல் வேண்டும். ஆனால், இங்கு நடந்த வைபவத்தை நோக்கும்போது மேற்படி பெண்களது தொழிற்பாட்டுக்கு ஆண்கள் துணையாக நின்றிருப்பரென என்னால் உணர முடிந்தது. இது இன்னும் வரவேற்கத்தக்க விடயமாகும். அந்த வகையில் இதனை ஒழுங்கு செய்த கண்டி இந்து மகளிர் அமைப்பு மற்றும் அதற்குத் துணையாக நின்ற பொது அமைப்புகள், இவர்களுக்கு ஊக்கம் வழங்கிய ஆண்கள் எனப் பலரையும் பாராட்டுகிறேன்''- என்றார்.

கண்டி இந்து மகளிர் சங்கத்தின் தலைவி ஆர்.கலையரசி தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் விசேட அதிதிகளாக கண்டி மாநகர ஆணையாளர் திருமதி இந்திகா அபேசிங்க, கண்டி தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் (திருமதி) இரேசா பெர்னாண்டோ உட்பட கண்டி நகர வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பிரித்தானிய பெண்ணின் நிதிஅட்டை திருட்டு; இளைஞன் ஹட்டனில் கைது!





எஸ்.கணேசன், மஸ்கெலியா நிருபர்

பிரித்தானிய பெண்ணொருவரின் நிதி அட்டையைக் கொள்ளையடித்து ஹட்டன் நகரிலுள்ள சில வர்த்தக நிலையங்களில் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்த நபரொருவர் ஹட்டன் பொலிஸாரால் நேற்று முன்தினம் (19) இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 22 வயது நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார்.

கண்டியிலிருந்து எல்ல நோக்கிச் சென்ற ரயிலில் பயணித்த பிரித்தானியப் பெண்ணின் நிதி அட்டையை ஹட்டன் மற்றும் தலவாக்கலை ரயில் நிலையங்களுக்கிடைப்பட்ட பகுதியில் வைத்தே இவர் கொள்ளையடித்துள்ளார். பின்னர் ஹட்டன் நகருக்கு வந்துள்ளார். ஹட்டன் நகரில் தங்க நகை, தொலைபேசி, ஆடை உள்ளிட்டவற்றைக் கொள்வனவு செய்துள்ளார்.

தங்க நகையை ஹட்டனிலுள்ள தனியார் அடகு பிடிக்கும் நிலையமொன்றில் அடகு வைத்து 78 ஆயிரம் ரூபாவைப் பெற்றுள்ளார்.

தனது நிதி அட்டை களவாடப்பட்டுள்ளமை தொடர்பில் எல்ல சுற்றுலாப் பொலிஸாரிடம் குறித்த பெண் முறையிட்டுள்ளார். இதனையடுத்து அது தொடர்பில் ஹட்டன் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

விசாரணையை ஆரம்பித்த ஹட்டன் பொலிஸார், வாடகை வாகனமொன்றில் எல்ல நோக்கிப் பயணமாகத் தயாராகிக்கொண்டிருந்த சந்தேக நபரைக் கைதுசெய்துள்ளனர். களவாடிய நிதி அட்டையிலிருந்து வாங்கிய பொருட்களையும் மீட்டுள்ளனர்.

இதனையடுத்து பிரித்தானிய பெண்ணை ஹட்டனுக்கு வரவழைத்து, நிதி அட்டையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தனர். மேலும், குறித்த நபர் கடைகளில் வாங்கிய பொருட்கள் மீள வழங்கப்பட்டு அதற்குரிய பணமும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிவனொளிபாதமலையில் டென்மார்க் பிரஜை தவறி விழுந்து உயிரிழப்பு

மஸ்கெலியா நிருபர்

டென்மார்க்கைச் சேர்ந்த ஜெப்டீன் எனப்படும் 67 வயதுடைய சுற்றுலாப் பயணியொருவர் நேற்று (20) காலை 6.45 மணியளவில் சிவனொளிபாதமலைக்குச் செல்லும் வேளையில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் ஊசிமலைப் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த வேளையில் அவருக்குத் திடீரென வலிப்பு ஏற்பட்ட நிலையில் அவர் தவறி விழுந்துள்ளார்.

அவரை ஊசிமலைப் பகுதியிலுள்ள பொலிஸார் நல்லதண்ணி நகருக்குத் தூக்கிச் சென்று அவசர அம்பியூலன்ஸ் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார். , ஜெப்டீனின் சடலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

# கண்டி நகரை தூய்மைப்படுத்தும் திட்டம்; மாநகர சபையால் முன்னெடுப்பு





ஜே.எம்.ஹாபீஸ்

கண்டி மாநகர சபையால் கண்டி நகரை தூய்மையாக வைத்திருக்கும் திட்டம் நேற்று முன்தினம் (19) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளீன் ஸ்ரீலங்கா (Clean Sri Lanka) என்ற அரசின் திட்டத்துக்கிணையாக இது மேற்கொள்ளப்படவுள்ளது. கண்டி நகரம் தவிர்ந்த மாத்தளை, நுவரெலியா முதலான மாநகர சபைகள் அடங்கலாக 47 உள்ளூராட்சி மன்றங்களினூடாக இது மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வுக்கு மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் பெகோன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். அவர் அங்கு உரையாற்றும்போது தெரிவித்ததாவது,

''நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்களை நாம் மதிக்கவேண்டும். எமது மக்கள் கூடாதெனத் தடை விதித்தவைகளைச் செய்வதில் திறமை காட்டுகின்றனர். இது ஒழிக்கப்பட வேண்டும். இதனை பாடசாலைகளிலிருந்து ஆரம்பித்தால் மாற்றியமைப்பது இலகுவாக இருக்கும். வளர்ந்தவர்களுக்கு மத்தியில் சட்டத்தை மதிக்கும் மனப்பாங்கு தற்போது குறைந்துகொண்டு வருவது கவலையளிக்கும் விடயமாகும்.

கண்டி நகரில் பிரதானமான 13 இடங்களை மையமாக வைத்து மேற்படி தூய்மைப்படுத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வர்த்தக சமூகம், அரச நிறுவனங்கள், பாதுகாப்புத் துறை மற்றும் சமூக பங்களிப்பு போன்ற பல துறைகளின் உதவியுடன் இதனை மேற்கொள்ளவுள்ளோம்'' - என்றார்.

# கண்டி - மஹியங்கனை வீதியில் கற்பாறைகள் விழும் அபாயம்

எம்.ஏ.அமீனுல்லா




கண்டி - மஹியங்கனை பிரதான வீதியின் 18ஆவது வளைவுப் பகுதியில் கற்பாறைகள் விழும் அபாயம் உள்ளதால் போக்குவரத்தை மேற்கொள்பவர்கள் மிகவும் அவதானமாகச் செல்லுமாறு கண்டி மாவட்ட செயலாளர் இந்திக்க உடவத்த கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு (18) முதல் பெய்து வரும் தொடர் மழையால் கஹட்டகொல்ல உட்பட பல இடங்களில் பாறைகள் சரிந்து வீழ்ந்துள்ளமையால் குறித்த வீதியைப் பயன்படுத்துவது அபாயகரமானதெனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கண்டி மாவட்ட உதவிப் பணிப்பாளர் இந்திக்க ரணவீர தலைமையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் வீதியிலுள்ள ஆபத்தான இடங்களை சீர்செய்தபோதிலும் மழை குறையாததால் மண்சரிவு மற்றும் பாறைகள் விழும் அபாயம் மீண்டும் ஏற்பட்டுள்ளதாகவும் அதேவேளை, குறித்த வழியால் பயணிப்போர் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறும் மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பண்டாரவளை சதொச நிலையத்தில் தீ

ராமு தனராஜா

பண்டாரவளை தர்ம விஜய மாவத்தையில் அமைந்துள்ள சதொச வியாபார நிலையத்தில் நேற்று (20) அதிகாலை 3.30 மணியளவில் தீப்பரவல் ஏற்பட்டதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சதொச வியாபார நிலையத்தில் ஏற்பட்ட மின்கசிவே தீ விபத்துக்கான காரணமெனத் தெரியவந்துள்ளது.

சதொச வியாபார நிலையத்தின் முகாமையாளர் பண்டாரவளை பொலிஸாருக்கும் உடன் தீயணைப்புப் பிரிவினருக்கும் தகவல் வழங்கியதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு உடன் விரைந்த பொலிஸாரும் தீயணைப்புப் பிரிவினரும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் சார்பாக கண்டி உதவி இந்தியத் தூதுவராலய அதிகாரிகளால் கண்டி- மாத்தளை எல்லையில் அமைந்துள்ள கபரகல அரச பெருந்தோட்டப் பகுதியைச் சேர்ந்த இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கண்டி உதவி இந்தியத் தூதுவராலய இரண்டாம் செயலாளர் சோமராஜுவால் சுமார் 200 கூரைத் தகடுகள் கையளிக்கப்பட்டன. (ஜே.எம்.ஹாபீஸ்)

# கண்டி - பேராதனை வீதியில் வாகன விபத்து: ஒருவர் மரணம்!

ஜே.எம்.ஹாபீஸ்

கண்டி - பேராதனை வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 26 வயதுடைய ஒருவர் நேற்று முன்தினம் (19) மரணமடைந்துள்ளார். அதிகாலைவேளை இடம்பெற்ற இச்சம்பவத்தில் மரணித்தவர் கண்டியை வசிப்பிடமாகக்கொண்ட முஹம்மட் பாருக் முஹம்மட் ராசிக் எனப் பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி சம்பவம் தொடர்பில் காய்கறி ஏற்றிவரும் லொறியொன்றின் சாரதியொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டிடமொன்றில் பொருத்தப்பட்ட சீ.சீ.ரி.வி. கெமராவின் உதவியுடன் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# பிட்டமாறுவயில் ஆணின் சடலம் மீட்பு

ராமு தனராஜா

பிட்டமாறுவ பகுதியில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மடூல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

மடூல்சீமை பிட்டமாறுவ வீதியில் 'றோபேரி இரட்டை போக்கு' எனப்படும் இடத்தில் நபரொருவரின் சடலம் மீட்கப்பட்டதாக மடூல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் சுமார் 80 வயதுடைய மீகாகியூல பகுதியைச் சேர்ந்தவராக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். பிட்டமாறுவ வீதியில் றோபேரி இரட்டை போக்கு எனப்படும் பகுதியில் வயோதிபரொருவர் கீழே விழுந்த கிடப்பதாக அவசர தொலைபேசி இலக்கமான 119இற்கு அழைப்பொன்று வந்ததாகவும் பின்னர் சம்பவ இடத்துக்குச் சென்ற மடூல்சீமை பொலிஸார் குறித்த நபர் இறந்த நிலையில் காணப்பட்டதாக தெரிவித்தனர்.

சடலத்தை நீதவான் பார்வையிட்டதன் பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பதுளை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டதாக மடூல்சீமை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மடூல்சீமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.









தூய்மையான இலங்கை (Clean Sri Lanka) வேலைத்திட்டத்தின் கீழ் தலவாக்கலை, ஹோல்புறூக் நகரில் நேற்று முன்தினம் (19) நகரை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அக்கரப்பத்தனை பொலிஸாரின் ஏற்பாட்டில் வீதியோரங்களை சுத்தப்படுத்துதல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இதன்போது தூய்மையான இலங்கை வேலைத்திட்டம் தொடர்பில் பயணிகள், வர்த்தகர்கள் மற்றும் பிரதேசவாசிகள் ஆகியோருக்கு தெளிவூட்டப்பட்டது. இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுளா சுரவீரஆரச்சி, அக்கரப்பத்தனை பொலிஸ் நிலைய கட்டளைத்தளபதி பிரதான பொலிஸ் பரிசோதகர் சாந்த பண்டார, லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி ரெய்ஷினி துரைராஜ், அக்கரப்பத்தனை பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ,அக்கரப்பத்தனை உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (தலவாக்கலை நிருபர்)


## வாகன சந்தை —மாத்தறை

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| SP BFD-46xx | BAJAJ | PLATINA |
| SP BCB-56xx | BAJAJ | PLATINA |
| SP BBL-69xx | BAJAJ | DISCOVER 125 |
| SP BDX-30xx | BAJAJ | PULSAR |
| SP BGH-08xx | BAJAJ | PULSAR |
| SP BFA-61xx | HONDA | DIO |
| SP BDM-09xx | HONDA | DIO |
| SP BIA-12xx | HONDA | DIO |
| SP BFE-09xx | HONDA | DIO |
| SP BGG-84xx | HONDA | DIO |
| SP BGM-82xx | HONDA | DIO |
| SP BEW-66xx | HONDA | DIO |
| SP BHS-90xx | HONDA | DIO |
| SP BIS -43xx | HONDA | DIO |
| SP BGW-84xx | HONDA | DIO |
| SP BGT-03xx | YAMAHA | RAY ZR |
| SP BFE-40xx | YAMAHA | RAY ZR |
| SP BDU-23xx | HERO | DASH |
| SP BDA-88xx | HERO | DASH |
| SP BHG-71xx | TVS | NTORQ |

இடம்:—இல: 578, அனகாரிக தர்மபால மாவத்தை,மாத்தறை

பார்வையிடும் திகதி:—22.01.2025(காலை 8.30 முதல்10.30 வரை)

மோட்டர்சைக்கிள் விற்பனை திகதி:—22.01.2025 காலை 10.30 மணிமுதல்

விஸ்வா:—0774787096 சஞ்சய்:—0713306428

## வாகன சந்தை — நாரம்மல

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NW BIR-66xx | BAJAJ | CT 100 |
| NW BEK-92xx | BAJAJ | DISCOVER 125 |
| NW BEQ-86xx | BAJAJ | PULSAR 150 |
| NW BFL-38xx | BAJAJ | PULSAR 150 |
| NW BHY-14xx | BAJAJ | CT 100 |
| NW BGB-33xx | BAJAJ | CT 100 |
| NW BBA-80xx | BAJAJ | CT 100 |
| NW BGG-31xx | BAJAJ | PULSAR 150 |
| NW BCJ-67xx | BAJAJ | CT 100 |
| NW BEF-04xx | BAJAJ | CT 100 |
| NW BFE-82xx | BAJAJ | CT 100 |
| NW BIP-33xx | BAJAJ | CT 100 |
| NW BFY-99xx | BAJAJ | CT 100 |
| NW BHN-62xx | BAJAJ | CT 100 |
| NW BDM-25xx | BAJAJ | CT 100 |
| NW BBE-85xx | BAJAJ | PULSAR 150 |
| NW BBB-47xx | BAJAJ | CT 100 |
| NW BDH-43xx | HONDA | DIO |
| NW BDR-26xx | HONDA | DIO |
| NW BFU-88xx | HONDA | DIO |
| NW BFP-82xx | HONDA | DIO |
| NW BGR-08xx | HONDA | DIO |
| NW BIQ-78xx | HONDA | DIO |
| NW BIH-45xx | HONDA | DIO |
| NW BER-41xx | HONDA | DIO |
| NW BGD-53xx | HONDA | DIO |
| NW BEA-46xx | HONDA | DIO |
| NW BEU-20xx | HONDA | DIO |
| NW BFF-64xx | HONDA | DIO |
| NW BGU-29xx | HONDA | DIO |
| SG BGQ-11xx | HONDA | DIO |
| NW BDH-91xx | HONDA | DIO |
| NW BDK-30xx | HONDA | DIO |
| NW BDW-34xx | HONDA | DIO |
| NW BCS-57xx | HONDA | DIO |
| NW BHV-57xx | HONDA | DIO |
| NW BED-91xx | HONDA | DIO |
| NW BFD-58xx | HONDA | DIO |
| NW BIT-25xx | HONDA | DIO |
| NW BIB-44xx | HONDA | DIO |
| NW BHB-11xx | HONDA | DIO |
| NW BDD-85xx | HONDA | DIO |
| NW BDY-33xx | HONDA | DIO |
| NW BHG-86xx | YAMAHA | RAY-ZR |
| NW BII-71xx | TVS | NTORQ |
| WPBIB-83xx | NAVI | NTORQ |

இடம்:—இல: 91, குருநாகல் வீதி, நாரம்மல.

பார்வையிடும் திகதி:—24.01.2025(காலை 8.30 முதல்10.30 வரை)

மோட்டர்சைக்கிள் விற்பனை திகதி:—24.01.2025 காலை 10.30 மணிமுதல்

விஸ்வா:—0774787096 பண்டார:—0710773722

துரிதஅழைப்பு:—0117308080 வட்ஸ்அப்:— 0710356125

வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

நிபந்தனைக்குட்பட்டது

அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம், 146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663

# துறைமுக கொள்கலன் நெரிசல்

## ஜனாதிபதியின் ஆலோசனையின்படி எதுவும் இடம்பெறுவதில்லையென அமைச்சர் பிமல் விசனம்

துறைமுகத்துக்குள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் ஆலோசனைக்கமைய பணிகள் இடம்பெறுவதில்லை என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவை அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (20) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் துறைமுகத்துக்குள் நிலவும் நெரிசல் தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவியபோது அதற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

துறைமுக செயற்பாடுகளில் நான் தனிப்பட்ட ரீதியில் மகிழ்ச்சியடையவில்லை. ஜனாதிபதி வழங்கியுள்ள ஆலோசனைக்கமைய இந்த வாரத்துக்குள் சகலரும் அதனை



நிறைவேற்றுவார்களா என்பது தெரியவில்லை. அதனை நான் நேர்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

24 மணிநேரமும் பணியாற்றுமாறு கூறினாலும் ஒருசில முனையங்கள் அதிகாலை 3.20 மணிக்கு முன்னர் பணிகளை நிறுத்திவிடுகிறார்கள். கொள்கலன் லொறிகள் வரும்வரை, பேலியகொடவிலுள்ள பொறியியலாளர் சங்கத்துக்கு சொந்தமான காணியொன்று தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்தது. இருந்தபோதும் லொறிகளை துறைமுகத்துக்குள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று, கப்பல் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் பொருட்களை விடுவிப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். ஆனால் எதிர்பார்த்தளவு ஒத்துழைப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை.

மேலும், தனியார் துறை இறக்குமதியாளர்களிடமிருந்து எதிர்பார்த்தளவு ஒத்துழைப்பு கிடைப்பதாக நாங்கள் கருதவில்லை. அதன் காரணமாக எதிர்வரும் 31ஆம் திகதிவரை பார்ப்போம். அதுவரையில் எதிர்பார்த்த செயற்பாடுகள் இடம்பெறாவிட்டால் நாட்டுக்கு உண்மையை வெளிப்படுத்துவோம். அதன் காரணமாக ஒரு விடயத்தில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என்றால் அதற்கான மற்றையவர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

# மின்கட்டணக் குறைப்பு சிறந்த நிவாரணமாகும்

## வர்த்தக சங்கம் வரவேற்பு

அஷ்ரப் ஏ. சமத்

மின்சாரக் கட்டணத்தை 20 வீதமாகக் குறைத்தமை வரவேற்கத்தக்க விடயமென்று வர்த்தக சங்கத் தலைவர் தில்ஷான் நாவலகே தெரிவித்தார்.

கொழும்பு எக்கமுத்து வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் - அமைப்பாளர் இணைந்து நடத்திய ஊடக சந்திப்பு நேற்று (20) புறக்கோட்டை குணசிங்கபுரவிலுள்ள மேற்படி சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கம் மின்சாரப் பாவனையாளர்களுக்கு நிவாரணமாக நூற்றுக்கு 20வீத மின்சாரக் கட்டணத்தை குறைத்தமைக்காக நாங்கள் முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். புதிதாக பதவிக்கு வந்த அரசாங்கம் மின்சாரப் பாவனையாளர்களுக்கு நிவாரணமாக 20 வீதத்தை குறைந்தமையால் அது மிகப்பெரிய நிவாரணமாகவே பார்க்கப்படுகின்றது. கொழும்பில் 24 மணித்தியாலமும் சிறிய கடைகள் முதல்கொண்டு வீடுகளிலும் மின்சாரமின்றி வாழ முடியாது. அந்தவகையில் எங்களது வருமானத்தில் பாரிய தொகை மின்சாரக் கட்டணத்துக்கானதாக இருந்து வந்தது.

மின்சார பாவனைப் பொருட்களை மக்கள் குறைக்க வேண்டும். கடந்த கால அரசாங்கம் மின்சாரப் பாவனையை குறைப்பதற்காக எடுத்த முடிவுக்காக பொதுப் பயன்பாட்டு ஆணையாளரைக் கூட வீட்டுக்கு அனுப்பியது. மக்கள் தொடர்ச்சியாக வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 04 மாதங்களுக்குள் மக்களுக்கு சிறுகச்சிறுக நிவாரணங்கள் கிடைத்து வருகின்றன.

இதனால் நாங்கள் அரசியல் கட்சி சார்ந்தவர்கள் என்று கூறமுடியாது. ஓர் பொதுவான ஊழியர் சங்கத்தினர். இந்நிலையில், எதிர்க்கட்சியினர் ஊடகங்களில் வந்து அரசுக்கு எதிராக பிழையான தகவல்களை சொல்லிவருகின்றனர். சிலர் ஆர்ப்பாட்டங்களை நடத்த முற்படுகின்றனர். இவைகள் தொடர்பில் மக்கள் நன்கு புரிந்து செயற்பட வேண்டும். மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட்டால் பாவனையாளர்கள் அதிகார சபை மின்சார பாவனையின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களுக்கு விலைக்குறைப்பு செய்ய உரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் என்றார்.

# பன்வில விபத்துச் சம்பவம்: சாரதி சடலமாக மீட்பு

எம்.ஏ.அமீனுல்லா

பன்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹூலு கங்கை பத்தேகம வீதியில் பத்தேகம பாலத்துக்கு அருகில் ஜீப் வண்டியொன்று விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி மொரகஹ ஓயாவில் உயிரிழந்த நிலையில் நேற்று (20) காலை சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிராடோ ரக ஜீப் வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி மொரகஹா ஓயாவுக்குள் சுமார் 300 அடி சரிவில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த ஓய்வுபெற்ற ஆசிரியையும் அவரது கணவனும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

ஜீப்பில் பயணித்த மேலும் இருவர் காயமடைந்து கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சாரதி தொடர்பில் எவ்வித தகவலும் தெரியவரவில்லை.

ஜீப்பிலிருந்து தவறி மொரகஹ ஓயாவில் விழுந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார், கடற்படையினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது ஜீப் இருந்த இடத்திலிருந்து சுமார் 200 அடிக்கு கீழே சடலத்தை கண்டெடுத்துள்ளனர்.

கெமுனு ஹரிச்சந்திர என்ற சாரதி, உயிரிழந்த ஆசிரிய தம்பதியின் உறவினர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தெல்தெனிய பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் அமரசிங்கவின் வழிகாட்டலின் கீழ் பன்வில பொலிஸார் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹாஷிம் உமர் பௌண்டேசனினால் பல்கலை மாணவர்களுக்கு மடிக்கணினி







ஹாஷிம் உமர் பௌண்டேசன் ‘கல்விக்கு கைகொடுப்போம்’ திட்டத்தின் கீழ் முன்னெடுத்துவரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலவசமாக மடிக்கணினி வழங்கும் வேலைத்திட்டத்தின் 08ஆம் கட்ட விநியோகம் நேற்றுமுன்தினம் (19) ஞாயிற்றுக்கிழமை கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹாஷிம் உமர் பௌண்டேசன் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இதன்போது பாத்திமா நஹ்லா நிரோஸ் - கொழும்பு - 12, ஆர்.கார்த்திகா - டிக்கோயா, எஸ்.என்.எப்.ரிம்ஸா - வெலிகம, ஏ.எச்.அப்துல்லா - கொழும்பு கிரேண்ட்பாஸ் மற்றும் எஸ்.ஐ.பர்வின் - பொரளுவெவ ஆகியோர் மடிக் கணினிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் தினகரன் பத்திரிகையில் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வீரகேசரி பத்திரிகையின் ஆசிரியர் எஸ். ஸ்ரீ கஜன், சிரேஷ்ட ஊடகவியலாளர் ராதா மேத்தா, சமூகஜோதி ரபீக், மற்றும் பெற்றோர் எனப் பல் கலந்து கொண்டனர்.

# சுற்றறிக்கையையும் மீறி கட்டணம் அறவிடும் பணிகள் தீவிரம்

## பாடசாலை அதிபர்களுக்கு மத்திய மாகாண கல்வி அமைச்சு கடிதம்

அரச பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களை தவிர பெற்றோரிடம் மேலதிக பணம் பெறக் கூடாது என கல்வி அமைச்சு சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ள நிலையில், பெற்றோரிடமிருந்து அவசியமின்றி பணம் அறவிடப்படுவதாக மாகாண கல்வி அமைச்சுக்கு கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கண்டியில் உள்ள பல முக்கிய பாடசாலைகளில் இது தொடர்பான சுற்றறிக்கைகள் மீறப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பல பிரபல பாடசாலைகளில் தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதாகக் கூறி நிதி சேகரிக்கப்பட்டு வருவதுடன், சில பாடசாலைகளில் மாணவத் தலைவர்களுக்கு உரிய பணிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக 300 முதல் 500 ரூபா வரை பணம் வசூலிக்கப்படுவதாகவும் பணத்தை கொண்டு வாட்ஸ்அப் நடைமுறை மூலம் அறிவிப்புகள் வெளியிடப்படும் என்றும் பெற்றோர் கூறுகின்றனர்.

முதலாம் ஆண்டு மாணவர்களை சேர்ப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளுக்கு என்று கூறி பிரதான பாடசாலை ஒன்றில் 10,000 ரூபாவை வசூலித்துள்ளதாகவும் மேலும் இந்நிகழ்வில் தனது பிள்ளையை முதலாம் ஆண்டில் சேர்த்த தாய் ஒருவரால் அதிபரின் சம்மதத்துடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை மீறி, இவ்வாறு பணம் வசூலிக்க வேண்டாம் எனத் தெரிவித்துள்ள மத்திய மாகாண கல்வி அமைச்சு செயலாளரான மதுபானி பியசேன, மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக சகல அதிபர்களுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் என்பது தெரிந்தே.

2023ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் திகதி கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில், பாடசாலை மாணவர்களை அனுமதிப்பதற்கு அனுமதி மற்றும் அங்கத்துவக் கட்டணங்களைத் தவிர பெற்றோரிடமிருந்து பணம் எடுக்கக் கூடாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

25 ஏப்ரல் 2024 அன்று இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர் சேர்க்கை தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி, சகல அரச பாடசாலைகளிலும் வசதி மற்றும் சேவைக் கட்டணம், சங்க மேம்பாட்டுச் சங்க உறுப்பினர் கட்டணம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் என்பனவற்றை தவிர வேறு எந்தக் கட்டணமும் பெறுவது தடைசெய்யப்பட்டுள்ளது எனவும் இது போன்ற புகார்கள் கிடைக்குமிடத்து சட்ட ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தையிட்டி கணையவிற் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம்





பு.கஜிந்தன்

காங்கேசன்துறை, தையிட்டி கணையவிற் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் (19) இடம்பெற்றது.

17ஆம் திகதி கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகிய நிலையில் 18ஆம் திகதி எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து நேற்று காலை முதல் நடைபெற்ற பூர்வாங்க கிரியைகளைத் தொடர்ந்து தூபிகள் உட்பட பிள்ளையார் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு காலை 9.00 மணிமுதல் 11.37 வரையான சுபநேரத்தில் குடமுழுக்கு நிகழப்பெற்றது.

குறிப்பாக நீண்ட காலத்தின் பின் இடம்பெற்ற குடமுழுக்கில் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டு இறைவழிபாடாற்றினர்.

# 08 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் அறுவர் பலி

நடப்பாண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் இடம்பெற்ற 08 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் அறுவர் உயிரிழந்துள்ளதுடன் ஐவர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் தொடர்பாடல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் உயிரிழந்த நால்வர் ஒருங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள்.

இதேவேளை, கலஹாவில் நேற்றுமுன்தினம் (19) இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 24 வயதுடைய இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுற்றுலா நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு ஒன்பதாம் இடம்

2025ஆம் ஆண்டில் சுற்றுலா செல்வதற்கான சிறந்த 25 இடங்களின் பட்டியலில் இலங்கை ஒன்பதாவது இடத்தை பிடித்துள்ளது.

பி.பி.சி. செய்தி நிறுவனம், உலகம் முழுவதுமுள்ள சுற்றுலாப் பயணிகளின் நலன்கருதி இந்த ஆண்டின் முதலாவது சுற்றுலா வழிக்காட்டியை வெளியிட்டுள்ளது.

பி.பி.சி. செய்தி சேவை வெளியிட்டுள்ள சுற்றுலா வழிகாட்டியின் படி, சுற்றுலா செல்வதற்கு சிறந்த இடங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள உலகின் 25 இடங்கள், சுற்றுலாப் பயணிகளை வரவேற்பது மட்டுமன்றி சிறந்த பயண அனுபவத்தையும் வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. இந்த பட்டியலில் இலங்கை ஒன்பதாவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில், 2025ஆம் ஆண்டில் சிறந்த 25 சுற்றுலா இடங்களில் முதல் ஐந்து இடங்களில் முதலிடத்தில் டொமினிக்காவும் இரண்டாமிடத்தில் ஜப்பானின் நவோஷிமா மூன்றாமிடத்தில் இத்தாலியின் டோலமைட்ஸ், நான்காமிடத்தில் கிரீன்லாந்து ஐந்தாமிடத்தில் வேல்ஸும் உள்ளன.

# தொடர் மழையால் அநுராதபுரத்திலும் போக்குவரத்து செயற்பாடுகள் பாதிப்பு

அநுராதபுரம் நிருபர்

சீரற்ற காலநிலை காரணமாக பெய்துவரும் கடும் மழையினால் அநுராதபுரம் மாவட்டத்தின் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக அநுராதபுரம் தலைமையக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மல்வத்துஓயா பெருக்கெடுத்துள்ளதால் அநுராதபுரம், உடமளுவ பொலிஸ் பிரிவின் கொஹம்பகஸ்ஹந்திய மல்வத்து ஓயா பாலம் இடையிலான வீதி போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

கல்னேவ பொலிஸ் பிரிவின் அவ்கனவிலிருந்து வலவ்வேகம ஊடாக கலாவெவ வீதி அவ்கனவிஹாரை வரையான வீதியும் கல்னேவயிலிருந்து அளுபத்த ஊடாக ஹிரிபிட்டியாகம ஹதுன்கம பாலம் வரையான வீதியும் தந்திரி மலை பொலிஸ் பிரிவின் தந்திரி மலை செட்டிகுளம் வீதியின் போகொட பாலம் அமைந்துள்ள வீதிகள் முழுமையாக நீரில் மூழ்கி போக்குவரத்துகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள இடத்தில் அறிவித்தல் பலகை வைத்து மாற்று வீதிகள் குறிப்பிடப்பட்டு பொதுமக்களை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவ்விடங்களில் போக்குவரத்து பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய ஆலோசனைகளை பின்பற்றுமாறு மேற்குறிப்பிடப்பட்ட பகுதிகளிலுள்ள பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகளை பொலிஸார் கேட்டுக்கொள்கின்றனர். குறித்த விடயம் தொடர்பில் அப்பகுதியிலுள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் வலயத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திலினஹேவாபத்திரண மேலும் தெரிவித்தார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (20.01.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 179.4926 | 188.8634 |
| கனேடியன் டொலர் | 200.8660 | 209.4550 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.1217 | 41.6727 |
| யூரோ | 298.9269 | 311.3779 |
| ஜப்பான் யென் | 1.8652 | 1.9403 |
| சிங்கப்பூர் டொலர் | 212.1983 | 221.9675 |
| ஸ்ரேலிங் பவுன் | 354.7771 | 368.4841 |
| சுவிஸ் பிராங்க் | 316.9583 | 332.1377 |
| ஐ.அ. டொலர் | 292.2957 | 300.8181 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 787.0111 |
| குவைட் | குவைட் தினார் | 961.3400 |
| ஓமான் | ஓமான் ரியால் | 770.5852 |
| கட்டார் | கட்டார் ரியால் | 81.3659 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய ரியால் | 79.0671 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.7677 |

# சர்ச்சைகளுக்கு மத்தியில் திரைநீக்கம் செய்யப்பட்ட திருவள்ளுவர் சிலை


## 07 நாட்களுக்குள் அகற்ற மாநகர சபை காலக்கெடு









**(பாறுக் ஷிஹான்)**

நீதிமன்றத் தடையுத்தரவு பெறப்பட்ட நிலையில், சர்ச்சைக்குரிய திருவள்ளுவர் சிலை கொட்டும் மழைக்கும் மத்தியிலும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (19) திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கிட்டங்கி வீதியில் அமைந்துள்ள கல்முனை தமிழர் கலாசாரப் பேரவை வளாகத்தில் குறித்த சிலை பொலிஸாரின் பாதுகாப்புக்கும் மத்தியில் ஞாயிற்றுக்கிழமை(19) மாலை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ , வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்திப் பேரவை உறுப்பினர்கள் உட்பட கல்முனை பிராந்திய இளைஞர் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

**சிலையை அகற்ற மாநகர சபை அறிவுறுத்தல்**

கல்முனை பகுதியில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலை அனுமதியற்ற கட்டுமானம் எனக் குறிப்பிட்டு 07 நாட்களுக்குள் அகற்ற மாநகர சபை காலக்கெடு வழங்கிள்ளது. கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்திப் பேரவையால் ஞாயிற்றுக்கிழமை (19) கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்திப் பேரவை வளாகத்தில் திருவள்ளுவர் சிலை திறக்கப்படவுள்ளதாகவும் அந்தத் திறப்பு விழாவுக்கான அழைப்பிதழில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம்.றாபி கௌரவ அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அச்சிடப்பட்டிருந்த நிலையில், கல்முனை மாநகர சபையால் கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்திப் பேரவைச் செயலாளருக்கு முகவரியிட்டு 'கல்முனை கல்லடிக்குளப் பிரதேசத்தில் அனுமதியற்ற கட்டுமானம்' என்ற தலைப்பில் வெள்ளிக்கிழமை (17) கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் எமது KMC/Eng/App/2023ஆம் இலக்க 2023.04.25ஆம் திகதிய மற்றும் KMC/WD/COMP/10ஆம் இலக்க 2023.09.07ஆம் திகதிய கடிதங்களுக்கு மேலதிகமாக, தாங்கள் மேற்படி இடத்தில் கட்டுமானமொன்றை மேற்கொண்டுள்ளமையும் சிலையொன்றை அமைத்துள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த கட்டுமானம் மற்றும் சிலை வைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய சட்ட நடைமுறைகளுக்கமைவாக கல்முனை பிரதேச செயலகத்திலிருந்து காணி தொடர்பான அனுமதிப்பத்திரத்தையும் கல்முனை மாநகர சபையினூடாக நிர்மாணத்தை மேற்கொள்வதற்குரிய அனுமதியையும் பெற்ற பின்னரே குறித்த காணிக்குள் நிர்மாண வேலைகளை மேற்கொள்ளுமாறு ஏற்கனவே மேற்குறித்த கடிதங்கள் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

ஆகவே, இவ்வறிவுறுத்தல் கிடைக்கப்பெற்று 07 நாட்களுக்குள் தங்களால் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளை அகற்றி ஆதனத்தை முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவருமாறு வேண்டப்படுகின்றீர்கள். தவறும் பட்சத்தில் தங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்பதை அறியத்தருகின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சிலை திரை நீக்கம்**

நீதிமன்றத் தடையுத்தரவு கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் முறைப்பாட்டுக்கமைய கல்முனை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் அஹமட்லெப்பை நாதீர் கல்முனை கல்லடி நில குளத்தில் கல்முனை மாநகர சபையின் அனுமதியின்றி சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை திறப்பு விழா நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து கல்முனை தமிழ் கலாசாரப் பேரவைத் தலைவர், செயலாளர், உப தலைவர் ஆகியோருக்கு 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவைப் பிரிவு 106(1)இன் கீழான தடையுத்தரவு பிறப்பித்திருந்தார்.

மேலும் குறித்த சட்டவிரோத கட்டுமான நடவடிக்கையால் பல்லின இனங்கள் வாழும் இப்பிரதேசத்தில் இனமுறுகல் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாகவும் குறித்த திறப்பு விழாவை உடனடியாகத் தடைசெய்து கட்டளை வழங்குமாறு விண்ணப்பம் செய்துள்ளபடியால் மேற்குறித்த விடயங்களைக் கருத்திற்கொண்டு குறித்த திறப்புவிழா நடவடிக்கைகளை இன்றிலிருந்து 14 நாட்களுக்குத் தடைசெய்கின்ற விதமாக இத்தால் உமக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்கப்படுகின்றதென அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் குறித்த சிலை திறப்பு விழாவுக்கு பிரதம அதிதியாக அம்பாறை அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம கலந்துகொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்திப் பேரவை அமைந்துள்ள காணி குத்தகை முறையான விதத்தில் இல்லையென்றும் அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள நிர்மாணிப்புகள் அனுமதியில்லாத முறையற்ற விதத்தில் அமைந்துள்ளமை தொடர்பில் விமர்சனங்கள் எழுந்தவண்ணம் இருக்கும் நிலையில் இப்போது இந்த விடயம் பேசுபொருளாக மாறியுள்ளது.

# ஆட்சியாளர்கள் தோல்வியின் விளிம்பில் எடுக்கும் ஆயுதம் இனவாதம்: அதனை நாம் கையிலெடுக்கப்போவதில்லை

## பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா







**(வீரமுனை செய்தியாளர்)**

கடந்த ஆட்சியாளர்கள் தங்களின் தோல்வியின் விளிம்பில் எடுக்கும் ஆயுதம் இனவாதம். எமது அரசாங்கத்தில் ஒரு காலமும் இனவாதத்தைக் கையிலெடுக்கப்போவதில்லை என பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்தார்.

மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் பிரபல எழுத்தாளர் வி.மைக்கல் கொலின் எழுதிய 'அன்பின் முத்தங்கள்' கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் வி.ரஞ்சித மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா கலந்துகொண்டார். இதன்போது கருத்துத் தெரிவித்த அவர்,

''கடந்த ஆட்சியாளர்கள் தங்களின் தோல்வியின் விளிம்பில் எடுக்கும் ஆயுதம் இனவாதம். ஆனால், எமது அரசாங்கத்தில் எந்தவொரு கட்டத்திலும் நாம் அதனை முன்னெடுக்கப்போவதில்லை. எமக்கு எந்தவித பாதிப்புகள் வந்தாலும் நாம் ஒரு காலமும் இனவாதத்தைக் கையிலெடுக்கப் போவதில்லை என்ற உத்தரவாதத்தை நான் உங்களுக்குத் தருகின்றேன்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றத்தில் அரசியல் நெருக்கடி மாற்றப்பட்டுள்ளது. இருப்பினும், பொருளாதார நெருக்கடி, சமூக நெருக்கடிகள் காணப்படுகின்றன. இவற்றை நாம் வேகமாக மாற்றியமைக்க வேண்டிய தேவை உள்ளது. எமக்கு நாட்டை மீளக் கட்டியெழுப்பவேண்டிய தேவை உள்ளது. சமூக மாற்றத்தின் பிரதான பங்கை இலக்கியவாதிகள் வகிக்கின்றனர். எமக்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் பலமானது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அரசியல் முரண்பாடுகளானது தேர்தல் நிறைவடைந்த பின் அவை கைவிடப்படவேண்டும். மக்களுக்காக நாம் இன, மத, மொழி வேறுபாடின்றி ஒன்றிணைய வேண்டும். இதனை மாற்றியமைத்து நாம் சரியான திசைக்கு மக்களை வழிநடத்த வேண்டிய இடத்தில் இருக்கின்றோம்''- என்றார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, மட்டக்களப்பு மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் கு.பிரணவன் ஆகியோர் கலந்துகொண்டனர். அழைப்பு விருந்தினராக எழுத்தாளரும் ஊடகவியலாளருமான திருமலை நவம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.








ஓட்டமாவடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய காரியாலயத் திறப்பு விழா சங்கத்தின் தலைவர் எம்.எம்.எஸ். ஹாறூன் ஸஹ்வி தலைமையில் சனிக்கிழமை (18) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், கௌரவ அதிதியாக கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் பி.தனேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு காரியாலயத்தைத் திறந்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து மட்./ ஓட்டமாவடி தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சங்கத்தின் முன்பள்ளி பாலர் பாடசாலை மாணவர் விடுகை விழா நிகழ்விலும் அதிதிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கடலலை பாதிப்புக்குள்ளான கிண்ணியா கடற்கரைப் பூங்காவின் மற்றுமோர் பகுதி

## பூங்காவை முழுமையாக இழக்கவேண்டி ஏற்படுமென பொதுமக்கள் குற்றச்சாட்டு





**(சீனக்குடா செய்தியாளர்)**

கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் கனமழை காரணமாக, கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு கிண்ணியா கடற்கரைப் பூங்காவின் அடுத்த பகுதியையும் கடலலை காவுகொண்டுள்ளது.

கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இந்தப் பூங்காவை அலங்கரித்துக்கொண்டிருந்த பெரிய மரமொன்று வேரோடு விழுந்ததனால், பூங்காவின் ஒரு பகுதியை கடல் அலை அடித்துச் சென்றிருந்தது. அந்த நேரத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகரவும் வெளிவிவகார பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திராவும் நேரில் வந்து இந்தப் பூங்காவை பார்வையிட்டிருந்தனர்.

இதன்போது, எதிர்காலத்தில் இந்தப் பூங்காவை திருத்தியமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் தெரிவித்திருந்தார். ஆனாலும் அதற்கிடையில், நேற்று திங்கட்கிழமை (20) இன்னும் ஒரு பெரிய மரமும் வேரோடு விழுந்ததனால், பூங்காவின் அடுத்த பகுதியும் கடலுக்கு இரையாகியுள்ளது.

இந்நிலையில், பூங்காவின் எஞ்சியுள்ள பகுதி அவசரமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில், இன்னும் ஒரு வெள்ளம் ஏற்படுகின்ற போது, பூங்காவை முழுமையாக இழக்க வேண்டி ஏற்படுமெனவும் இந்த நிலையில் பூங்காவை பாதுகாப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகக் கவனஞ்செலுத்த வேண்டுமெனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# முறக்கொட்டாஞ்சேனையில் முச்சக்கரவண்டி விபத்து

## மூவருக்கு காயம்



**(மீராவோடை செய்தியாளர்)**

மட்டக்களப்பு - சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறக்கொட்டாஞ்சேனை பிரதான வீதியில் ஞாயிற்றுக்கிழமை (19) மாலை இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் மூவர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான வீதியோரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த எரிபொருள் பவுசரின் பின்பக்கமாக முச்சக்கரவண்டி மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த நபரொருவர் மாஞ்சோலை பகுதியைச் சேர்ந்த குடும்பத்தாருடன் முச்சக்கரவண்டியில் ஏறாவூர் பகுதிக்குச் சென்று ஊருக்குத் திரும்பி வரும்போதே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

முச்சக்கரவண்டியைச் செலுத்திய சாரதி சந்திவெளி வைத்தியசாலையிலும் அதில் பயணித்த இரு பெண்கள் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு பின்னர் அனைவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்பூர் பெரிய குளத்தை நேரில் பார்வையிட்ட ஜப்பான் தூதுவர்

## ஏனைய குளங்களை புனரமைப்புச் செய்யுமாறு கோரி மகஜரும் கையளிப்பு





**(சீனக்குடா செய்தியாளர்)**

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் இஸொமாடா அகியோ (Isomata Akio) திருகோணமலை சம்பூர் பகுதிக்கு நேற்றுக் காலை (20) விஜயம் செய்தார்.

இதன்போது ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 2022 ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்பட்ட சம்பூர் பெரிய குளத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

இக்குளமானது 9.4 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது. அத்தோடு, சம்பூரிலுள்ள ஏனைய இரண்டு குளங்களையும் புனரமைப்புச் செய்யுமாறு கோரி சம்பூர் கமநல சேவைத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால் இலங்கைக்கான ஜப்பான் தூதுவரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வேண்டுகோளின்படி இரத்ததானம் வழங்கும் நிகழ்வு சின்னம்மா பௌண்டேஷனின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை(19) இடம்பெற்றது. இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவுக்குப் பொறுப்பான மருத்துவ உத்தியோகத்தர் மற்றும் தாதி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். இதன்போது இரத்தம் வழங்குவதற்காக அப்பிரதேச மக்களும் நலன் விரும்பிகளும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

(திராய்க்கேணி செய்தியாளர்)

## மழை, வெள்ளத்தால் குளங்களின் நீர் மட்டம் உயர்வு:

# மண்டூர் - வெல்லாவெளி பிரதான வீதியில் போக்குவரத்து பாதிப்பு

### நிரந்தர பாலம் அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை







**(மட்டக்களப்பு, குருக்கள்மடம் செய்தியாளர்கள்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரணமாக களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, பட்டிப்பளை உள்ளிட்ட பல பிரதேசங்களின் தாழ் நிலப் பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி வாழ் மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வதிலும் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனினும் நேற்று திங்கட்கிழமை(20) காலையிலிருந்து மழை சற்று ஓய்ந்துள்ளபோதிலும் வெள்ள நீர் மட்டக்களப்பு வாவியை நோக்கி வழிந்து வருவதையும் அவதானிக்க முடிந்தது.

இந்நிலையில் களுவாஞ்சிக்குடி, களுதாவளை, தேற்றாத்தீவு, வெல்லாவெளி, பழுகாமம், போரதீவு, குருமண்வெளி உள்ளிட்ட பல பகுதிகளிலுமுள்ள குளங்கள் நிரம்பி வழிந்து வருகின்றன. எனினும் கிராமங்களிலுள்ள பெரும்பாலான உள்வீதிகள் வெள்ள நீரினால் மூழ்கியுள்ளதனால் போக்குவரத்துச் செய்வதிலும் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக குளங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளதையடுத்து, நவகிரி குளத்தின் அனைத்து வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.இதனால் மண்டூர் - வெல்லாவெளி பிரதான வீதியில் வெள்ள நீர் ஊடறுத்து செல்வதனால் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வெள்ள நீர் ஊடறுத்து செல்வதனால் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

மண்டூர் - வெல்லாவெளி பிரதான வீதியை ஊடறுத்து வெள்ளநீர் பாய்வதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இராணுவத்தினரின் உதவியுடன் மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச சபையின் ஊழியர்கள் உழவு இயந்திரம் மூலம் போக்குவரத்து சேவையை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்று திங்கட்கிழமை காலை 06 மணிவரை தொடர்ந்த மழை காரணமாக நவகிரி குளத்தின் நீர்மட்டம் 31அடி 05 அங்குலம், உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் 32 அடி 08 அங்குலம், உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 18 அடி 03 அங்குலம், கட்டுமுறிவுக் குளத்தின் நீர்மட்டம் 12 அடி 06 அங்குலம், கித்துள்வெவ குளத்தின் நீர்மட்டம் 12 அடி 03 அங்குலம், வெலிக்காக்கண்டிய குளத்தின் நீர்மட்டம் 16 அடி 11 அங்குலம், வடமுனைக்குளத்தின் நீர்மட்டம் 13 அடி 05 அங்குலமாகவும் உயர்ந்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்வாறு ஒவ்வொரு வருடமும் ஏற்படும் வெள்ள அனர்த்தம் காரணமாக தாம் பாதிக்கப்படுவதாகவும் இதற்கு நிரந்தரமான பாலம் ஒன்றை அமைத்துத் தருமாறும் அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மழை வெள்ளத்தினால் உள்ளூர் போக்குவரத்துக்காக படகு, உழவு இயந்திர சேவைகள் முன்னெடுப்பு

### 13 குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர் இடைத்தங்கல் முகாம்களில்



***(மட்டக்களப்பு)***

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஞாயிற்றுக் கிழமை (19) காலை 9.30 மணியிலிருந்து கடந்த 24 மணித்தியாலமாக தொடர்ந்த மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டு உள்ளூர் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால் மாவட்டத்தின் பிரதான கால்வாய்கள், ஆறுகள் ஊடாக போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புலிபாய்ந்தகல், கோஸ்வே மற்றும் கிண்ணயடி தொடக்கம் பிரம்படித்தீவு வீதிகளில் வெள்ள நீர் பாய்வதால் அவ்வீதியூடான போக்குவரத்துக்காக படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஈரலக்குளம் ,மயிலவெட்டுவான் மற்றும் சித்தாண்டி தொடக்கம் பெருமாவெளி பகுதிகளுக்கான இரண்டு படகுசேவைகள் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மண்டூர் - வெல்லாவெளி பிரதான வீதியால் நீர் ஊடறுத்து பாய்வதனால் அவ்வீதியைக் கடப்பதற்காக உழவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நாவற்குடா கிழக்கு கிராம சேவகர் பிரிவில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர் மெதடிஸ்த பாலர் பாடசாலை இடைத்தங்கல் முகாமில் தக்க வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையமானது அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக 24 மணி நேரம் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# விளைந்த நெல்லை அறுவடை செய்யவிடாது தடுத்தவர்களே நஷ்டஈடு தரவேண்டும்

## பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை



**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பில் விளைந்த வேளாண்மையை அறுவடை செய்யவிடாது, விவசாய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட திகதியிலேயே அறுவடை செய்ய வேண்டும் என சில அமைப்புகள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு சென்று தடுத்தனர். இதனால் இன்று மழை வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் வேளாண்மை நீரில் மூழ்கியுள்ளது. எனவே இறுவடை செய்யவிடாது தடுத்தவர்களே அதற்கான நஷ்டத்தை தர வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சீரற்ற கால நிலை காரணமாக இரு தினங்களாக பெய்துவரும் கனமழையினால் மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஊடகங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை (19) கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

2024-2025 ஆண்டு பெரும்போக வேளாண்மை செய்கை தொடர்பாக முன்னோடி கூட்டத்தில் 20ஆம் திகதி நெல் அறுவடை என தீர்மானிக்கப்பட்டு முடிவு எட்டப்பட்டது. இருந்தபோதும் கடந்த 10 தினங்களுக்கு முன்னர் அறுவடை செய்யும் நிலையில் வேளாண்மை விளைந்திருந்ததுடன் அறக்கொட்டியான் தாக்கமும் ஏற்பட்டிருந்தது. இருந்தபோதும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் எதிர்வரும் 18ஆம் திகதியிலிருந்து கனமழை பெய்யும் விவசாயிகள் அவதானமாக செயற்படுமாறு எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதனையடுத்து அரசாங்க அதிபரை சந்தித்து கனமழை வர இருக்கின்றது. கடந்த 10 நாட்களுக்கு முன்னர் அறுவடை செய்ய வேண்டிய நிலையில் பாரியளவில் வேளாண்மை அறுவடை செய்ய வேண்டியுள்ளது. ஆகவே அறுவடையை செய்ய அந்தந்த அமைப்புகளை தீர்மானித்து முடிவெடுக்குமாறு கேட்டுக் கொண்டோம்.

அதற்கு அரசாங்க அதிபர் வாய்மூலமாக ஒரு உத்தரவு தந்தார். அமைப்புகள் விரும்பினால் அறுவடை செய்யுமாறு தெரிவித்தார்.

அந்த வகையில் ஒரு விவசாயி அறுவடை செய்ய ஆரம்பித்ததையடுத்து சில அமைப்புகள் உரிய காலத்துக்கு முன்னர் நெல் அறுவடை செய்யப் போகின்றார்கள் எனத் தெரிவித்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்து அறுவடை செய்வதை தடுத்தனர். இதனால் இன்று கனமழை வெள்ளத்தினால் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

காலநிலை மாற்றத்துக்கு ஏற்றவாறு தீர்மானத்தை மாற்றி தந்திருக்கலாம். விளையாதவர்கள் பிந்தி அறுவடை செய்யமுடியும். அவர்கள் நகரில் இருந்துகொண்டு எங்களுடைய வாழ்வாதாரத்தை நாசமாக்குகின்ற வேலையை செய்கின்றனர். முழு நெல்லும் முளைத்துவிட்டது. இதனை இனி அறுவடை செய்தும் பிரயோசனம் இல்லை. இது சாப்பாட்டுக்கும் எடுக்க முடியாது. வியாபாரியும் எடுக்க மாட்டார்.

விவசாயம் தெரியாத சில வெளிநபர்கள் அமைப்பு என இருப்பவர்கள் தடைபோட்டு எமது வேளாண்மை நாசமாக்கியுள்ளனர். இந்த நஷ்டத்தை அரசாங்கம் எப்படி தரமுடியும். மனித உரிமை ஆணைக்குழவுக்குச் சென்று தடை போட்டவர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு என்ன பதில் சொல்லப்போகின்றனர். இவர்களிடமிருந்து நஷ்ட ஈட்டைப் பெற்றுத்தர வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

## திருகோணமலை சேருநுவர பகுதியில் பஸ் விபத்து; 14 பயணிகள் படுகாயம்



***(சீனக்குடா செய்தியாளர்)***

காத்தான்குடியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்று, கல்லாறு பகுதியில், விபத்துக்குள்ளானதில் 14 பயணிகள் படுகாயமடைந்துள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று (20) நள்ளிரவு 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சேருநுவர கல்லாறு பகுதியில் இராணுவ முகாமுக்கு முன்னால் உள்ள பாரிய மரம் ஒன்றின்மீது பஸ் மோதியே விபத்து சம்பவித்துள்ளது.

49 பேர் பயணித்த இந்த பஸ்ஸில், 14 பயணிகள் படுகாயமடைந்த நிலையில், அவர்கள் மூதூர் மற்றும் திருகோணமலை வைத்திய சாலைகளின் அவசர சிகிச்சை பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காத்தான்குடியிலிருந்து மன்னம்பிட்டி பாலத்தின் ஊடாகவே குறித்த பஸ் தினமும் , கொழும்பு நோக்கி செல்கிறது.

இந்த நிலையில், வெள்ளம் காரணமாக மன்னம்பிட்டி பாலத்தின் ஊடான போக்குவரத்து தடைப்பட்டிருப்பதனால், கந்தளாய் ஊடாக கொழும்பு நோக்கிச் சென்ற பஸ்ஸே, சேருநுவர ,கல்லாறு பகுதியில் விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பில் அதிகபட்சமாக 123.5 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவு

***(மட்டக்களப்பு)***

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலம் தொடர்ந்த மழைவீழ்ச்சியில் அதிக பட்ச மழைவீழ்ச்சி 123.5 மில்லி மீற்றர் வாகனேரி பிரதேசத்தில் பதிவாகியுள்ளதுடன் வாகனேரி குளத்தில் 19.2”அடி நீர்மட்டம் அதிகரித்து நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது.

உருகாமம் பகுதியில் 101.1 மில்லி மீற்றர் மழை பெய்து, உருகாமம் குளத்தில் 15.8” அடி நீர் மட்டம் அதிகரித்துள்ளது. இதேவேளை உன்னிச்சை பிரதேசத்தில் 84.0மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதுடன், உன்னிச்சை குளத்தில் 33 ஒரு அடிக்கு நீர் மட்டம் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

தும்பங்கேணியில் 62.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் நவகிரி பிரதேசத்தில் 62.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் மட்டக்களப்பில் 65.2மில்லி மீற்றரும் கிரான் பகுதியில் 68 மில்லி மீற்றரும் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. குறைந்த மழை வீழ்ச்சியாக கட்டுமுறிவுக்குளத்தில் 18 மில்லி மீற்றர் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டு 37 வயது குடும்பஸ்தர் உயிரிழப்பு



***(மீராவோடை செய்தியாளர்)***

வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வெலிகந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (19) வெலிகந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துக்கல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சேனபுர பகுதியில் திருமணம் முடித்துள்ள வாழைச்சேனை - பிறைந்துரைச்சேனை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய றிஸ்வான் தனது மனைவி மற்றும் உறவினர் ஒருவருடன் கரப்பொல - முத்துக்கல் வழியாக சேனபுர பகுதிக்கு செல்லும் போது மூவரும் வெள்ளநீரில் சிக்கியுள்ளனர். அதில், இளம் குடும்பஸ்தர் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், அவரது மனைவி மற்றும் மற்றைய நபர் மரக்கிளை ஒன்றினைப் பிடித்து உயிர் தப்பியுள்ளனர். உயிரிழந்த நபரின் சடலம் மருத்துவப் பரிசோதனைக்காக வெலிகந்தை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டோரை பார்வையிட பிரதேச செயலாளர் நேரடி விஜயம்



**(நாவிதன்வெளி செய்தியாளர்)**

சீரற்றகாலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மல்கம்பிட்டி (நெய்னாகாடு) கிராமத்தைச் சேர்ந்த மக்கள் சம்மாந்துறை தாருஸ்ஸலாம் மகா வித்தியாலய இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை நேற்று(20) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா நேரில் சென்று சந்தித்தார். இதன்போது அடிப்படைத் தேவைகள் மற்றும் குறைபாடுகளை கேட்டறிந்து கொண்ட அவர் அவற்றை உடன் நிவர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரையும் வழங்கினார்.

இவ் விஜயத்தில் சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், வீரமுனை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, கிராம சேவகர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

இவ் இடைத்தங்கல் முகாமில் சுமார் 25இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஓட்டமாவடியில் அரிசிக்கடை சுற்றிவளைப்பு!

**(மீராவோடை செய்தியாளர்)**

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - 3ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள அரிசிக்கடையொன்று நேற்று (20) சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பொலிஸாருக்கும் நுகர்வோர் அதிகார சபையினருக்கும் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த அரிசிக் கடையில் இந்திய நாட்டு அரிசியை பொதி மாற்றி கலப்படம் செய்த தகவல் கிடைத்ததற்காகவே இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடை உரிமையாளருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்தியா, சீனாவுடனான ஒப்பந்தங்களால் இலங்கை யுத்தத்துக்கு இலக்காகும்

## முன்னிலை சோஷலிசக் கட்சி எச்சரிக்கை

"இந்தியா, சீனா உள்ளிட்ட சர்வதேச நாடுகளிடம் இலங்கை வழங்கும் வெவ்வேறு இணக்கப்பாடுகள் காரணமாக வலயங்களிலுள்ள அதிகாரம் படைத்தவர்கள், உலகத்தில் அதிகாரம் படைத்தவர்களாக இருப்பவர்கள் மற்றும் வல்லரசுகளின் மத்தியில் ஏற்படும் முரண்பாடுகளில் இலங்கை முழுமையாகத் தலையிட வேண்டிய அவசியம் ஏற்படும். மிகவும் பாரதூரமான - அபாயகரமான அரசியல் பொறியில் சிக்க நேரிடும். மேலும் இலங்கை யுத்தத்துக்கு இலக்காவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன" - என்று முன்னிலை சோஷலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்திய மற்றும் சீனா விஜயத்தின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை தொடர்பில் நேற்று (20) ஊடகங்களுக்கு விளக்கமளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''ஒரு சமுத்திரம் ஒரு பயணத்துக்கான சீன வேலைத்திட்டத்துக்கு இலங்கை முழுமையாக ஆதரவளிக்கவும் உள்நுழையவும் அதனுடன் தொடர்புடைய வேலைத்திட்டங்களை இலங்கையில் அமுல்படுத்துவதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதிலொரு பாரதூரமும் இருக்கிறது. ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இலங்கையின் நிலப்பரப்பு இந்தியாவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்த வேறு எந்த நாட்டுக்கும் வாய்ப்பு வழங்கப்படமாட்டாதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.



வெவ்வேறு பூகோள அரசியல் வேலைத்திட்டங்களுடன் இந்திய சமுத்திரத்தில் செயற்பட்டு வரும் பல்வேறு அதிகாரப் பலம் கொண்ட தரப்புகளுக்கு அவரவர்களின் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இலங்கை வாக்குறுதியளித்து வருகிறது.

இது அரசியல் ரீதியாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். இதனூடாக வலயங்களிலும் அதிகாரம் படைத்தவர்கள், உலகத்தில் அதிகாரம் படைத்தவர்களாக இருப்பவர்கள் மற்றும் வல்லரசுகளின் மத்தியில் ஏற்படும் முரண்பாடுகளில் இலங்கை முழுமையாக தலையிட வேண்டிய அவசியம் ஏற்படும். இலங்கை யுத்தத்துக்கு இலக்காவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன.

இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளுடனும் இணைந்து இலங்கை வெளியிட்டுள்ள இரு கூட்டறிக்கைகளையும் பரிசீலனை செய்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இந்தியாவின் ஆதிக்கத்துக்குள்ளாக்குவதற்கு அம்பாந்தோட்டை உள்ளிட்ட தெற்கு பகுதியை சீனாவுக்கு வழங்க இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

துறைமுகத்தை அண்மித்து எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்குவதனூடாக அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கான எரிபொருட்களை விநியோகிக்கும் வர்த்தக செயற்பாடுகள் முழுமையாக சீனாவின் வசமாகும். அதேபோன்று, எரிபொருள் குதங்களில் எரிபொருள் குழாய்களை இணைப்பதனூடாக திருகோணமலை துறைமுகத்தின் எரிபொருள் விநியோக செயற்பாடுகள் இந்தியவசமாகும்.

திருகோணமலை எரிபொருள் குழாய் கொழும்பு துறைமுகம் வரை நீடிக்கப்படுமென்றால் கொழும்பு மேற்கு முனையம் இந்திய வசமும் தெற்கு முனையம் சீனாவின் வசமுமுள்ள நிலையில் கொழும்பு துறைமுகத்திலிருந்து கிடைக்கும் கப்பல்களுக்கான எரிபொருள் வருமானம் எமக்கு கிடைக்கும். தற்போதும் கிழக்கு முனையம் தனியார்மயப்படுத்தப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு வழங்கப்பட்டால் அவர்கள் யுத்தக் கப்பல்களுக்கு எரிபொருள் விநியோகிப்பதைத் தடுக்க முடியாது. திருகோணமலை துறைமுகத்திலும் அவ்வாறான நிலைமையே ஏற்படும். எனவே, இதுபோன்ற இணக்கப்பாடுகளினால் நாம் மிகவும் பாரதூரமான அபாயகரமான அரசியல் பொறியில் சிக்க நேரிடும்''- என்றார்.

# ஊடகர் விக்டர் ஐவனின் மறைவு பேரிழப்பு

## மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் அனுதாபம்

இலங்கையின் துணிச்சல் மிக்க சிரேஷ்ட ஊடகவியலாளர்களுள் ஒருவரான முன்னாள் 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் காலமான செய்தியறிந்து மிகவும் கவலையடைந்ததாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அவர் இலங்கையில் தலைசிறந்த அரசியல் விமர்சகராகவும் புலனாய்வு எழுத்தாளராகவும் தீவிர சமூக செயற்பாட்டாளராகவும் பன்னூல் ஆசிரியராகவும் பாரிய பங்களிப்பைச் செய்துள்ளார்.அன்னாரின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கும் நெருங்கிய சகாக்களுக்கும் கொள்கைப்பற்றாளர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாகன இறக்குமதியில் எம்.பிக்களுக்கு விசேட சலுகை வழங்கப்போவதில்லை

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல சுட்டிக்காட்டு

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென விசேடமாக வாகன இறக்குமதி செய்வது தொடர்பில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்பதுடன் அவ்வாறான வாகன இறக்குமதிக்கு அனுமதியளிக்கப் போவதுமில்லையென்று பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று (20) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''பொதுமக்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கான தீர்வுகளை வழங்கவே அரசாங்கம் எதிர்பார்க்கிறது. கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பெப்ரவரி முதலாம் திகதியின் பின்னர் இந்த வேலைத்திட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். இந்த வேலைத்திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, இந்த வேலைத்திட்டத்தினூடாக மக்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அந்தப் பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கக் கூடிய வேலைத்திட்டமாக இது அமையுமென எதிர்பார்க்கிறோம். இந்த வேலைத்திட்டத்தில் அரச அதிகாரிகள், பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள் எனச் சகலரும் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்பாக இது அமையுமென நம்புகிறோம்.

கிளீன் ஸ்ரீலங்கா என்பது சுற்றுச்சூழல் சுத்தம் செய்வதற்கான வேலைத்திட்டம் மாத்திரமல்ல, அதற்கப்பாலான கருத்தோட்டமும் இதில் இருக்கிறது. மக்களின் சிந்தனையில் மாற்றம் ஏற்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டிலிருந்தே செயற்பட்டு வருகிறோம். அதனுடன் தொடர்புடைய சகல நிறுவனங்களையும் இணைத்து செயலாற்றக் கூடிய தேசிய வேலைத் திட்டம் எம்மிடம் இருக் கிறது.

கொள்கைப் பிரகடனத் தில் எங்களால் குறிப்பிட்ட விடயங்களை அவ்வாறே நடைமுறைப்ப டுத்துவோம். முன்னாள் ஜனாதிபதிகளின் உத்தியோகபூர்வ இல்லங்களைப் பொறுப்பேற்பது தொடர்பில் சட்டமூலமொன்றை முன்வைப்போம். அதன் பிராகாரம் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம்.

வாகன இறக்குமதி தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. ஆரம்பத்தில் கூறியதுபோன்று பொதுப் போக்குவரத்துக்குத் தேவையான வாகனங்களை முதலில் இறக்குமதி செய்வோம்.

அதன் பின்னர் தொழிற்றுறை மற்றும் தனியார் போக்குவரத்துக்கு அவசியமாக வாகனங்களை இறக்குமதி செய்வோம். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென விசேடமாக வாகன இறக்குமதி செய்வதற்கான எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை. அவ்வாறான வாகன இறக்குமதிக்கு அனுமதியளிக்கவும் மாட்டோம். இருந்தபோதும், பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களுக்கு சேவையாற்றும் வகையிலான பொருத்தமான நிலைமையை உருவாக்கியுள்ளோம்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்குமான சகல மேலதிக கொடுப்பனவுகளும் ஒரு கணக்குக்கே வழங்கப்படும். நிஹால் கலபதியிலிருந்து ஆரம்பித்த அந்தப் பயணம் அவ்வாறே முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அந்த நிதி பொது மக்களின் பயன்பாட்டுக்கே எடுக்கிறோம்''- என்றார்.

# போக்குவரத்துப் பாதிப்பால் ஹட்டனில் பயணிகள் அவதி





மனுர சுதத் செல்லஹேவா

ஹட்டனிலிருந்து கொழும்பு செல்லும் பயணிகள் பஸ்களுக்கான தட்டுப்பாட்டால் நேற்று (20) பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகியினர்.

தைப்பொங்கல் கொண்டாட்டம் உள்ளிட்ட வெவ்வேறு பணிகளுக்காக கொழும்பிலிருந்து ஹட்டன் மற்றும் ஹட்டனை அண்மித்த பிரதேசங்களுக்குச் சென்றிருந்த பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நேற்று (20) மீண்டும் கொழும்புக்கு வருவதற்காக ஹட்டன் பஸ் நிலையத்துக்கு வந்திருந்தபோது ஹட்டனிலிருந்து கொழும்பு செல்லும் பயணிகள் பஸ்களுக்கான தட்டுப்பாட்டினால் பயணிகள் நீண்ட வரிசையில் காத்திருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இது தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபையின் அதிகாரியொருவரிடம் வினவியபோது, போக்குவரத்தில் ஈடுபடுத்த போதிய எண்ணிக்கையில் பஸ்கள் இன்மையால் பயணிகளுக்கு இந்த அசௌகரியம் ஏற்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

# இலஞ்ச குற்றச்சாட்டு

# அதிபருக்கு விளக்கமறியல்

மாணவனை முதலாம் தரத்துக்கு சேர்ப்பதற்காக 10 சீமெந்து பைக்கட்டுகளுக்காக 18,520 ரூபா நிதியை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட பாடசாலை அதிபரை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய குறித்த அதிபர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்டிருந்ததுடன் இவர் பண்டாரவளையிலுள்ள பாடசாலையொன்றில் கடமையாற்றும் அதிபர் என்பதும் விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சந்தேகநபர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் நேற்று (20) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு விசாரணையின்போது, சம்பவம் தொடர்பான விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருவதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரின் அறிவிப்பை பரிசீலனை செய்த நீதவான் சந்தேகநபரை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பாடசாலைக்கு முதலாம் தர மாணவர் ஒருவரை சேர்ப்பதற்காக பத்து சீமெந்து பைக்கட்டுகளுக்கான பணத்தை பாடசாலைக்கு முன்னால் உள்ள விற்பனை நிலையத்துக்கு செலுத்துமாறு சந்தேகநபரான அதிபரினால் முறைப்பாட்டாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட நபர் முன்வைத்த முறைப்பாட்டுக்கமையவே குறித்த அதிபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# மசாஜ் நிலையங்களுக்கு போதைப்பொருள் விநியோகம்

## சந்தேகத்தின் அடிப்படையில் வர்த்தகர் கைது

ஹனபி எம். தாஸீம்

மசாஜ் நிலையங்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்த போதைப்பொருள் வர்த்தகர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் (19) மஹர சந்தியில் வைத்து கிரிபத்கொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, 3,600 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதே நாளில், ஹுணுபிட்டிய, நஹேனவத்த பகுதியில் 3,370 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடனும் மற்றும் 10 போதைப்பொருள் மாத்திரைகளுடனும் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பெண்ணின் மகளும் மருமகனும் போதைப்பொருளுடன் பிடிபட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட போதைப்பொருள் வர்த்தகர் கிரிபத்கொட பிரதேசத்தைச் சேர்ந்த முப்பத்தாறு வயதுடையவரெனவும் குறித்த பெண் நாஹேனவத்த பிரதேசத்தைச் சேர்ந்த ஐம்பத்தெட்டு வயதுடையவரெனவும் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் மஹர நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய கிரிபத்கொடை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# காஸா போர் நிறுத்தம் வரவேற்கத்தக்கது

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவிப்பு

காஸாவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை வரவேற்பதாக வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பணயக்கைதிகள் மற்றும் கைதிகளைப் பரிமாறிக் கொள்வதற்கும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை காஸாவிலுள்ள அவர்களின் வதிவிடங்களுக்குத் திருப்பி அனுப்புவதற்கும் காஸா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் வழிவகுக்கும் இப்போர்நிறுத்த ஒப்பந்தமானது, நீடித்து நிலைத்திருக்குமென்று நாங்கள் நம்புகிறோம்.

இவ்வாறான முன்னேற்றங்கள் பலஸ்தீனத்திலும் அதனை அண்மித்த பிராந்தியத்திலும் நிலையான அமைதியை நிலைநாட்ட சிறப்பாகப் பங்களிப்பு செய்யுமென்றும் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# 'எயார் கமாண்டர்ஸ் கிண்ணம்' விருது வழங்கும் விழா





இலங்கை விமானப்படை மற்றும் ஈகிள்ஸ் கோல்ஃவ் லிங்க்ஸ் இணைந்து 12ஆவது தடவையாக ஏற்பாடு செய்த 'எயார் கமாண்டர்ஸ் கிண்ணம்' கோல்ஃவ் போட்டியின் வெற்றியாளர்களுக்கான விருது வழங்கும் விழா சீனக்குடாவிலுள்ள ஈகிள்ஸ் கோல்ஃவ் லிங்க்ஸில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா தலைமையில் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவின் பங்கேற்புடன் நடைபெற்றது.

இந்த ஆண்டு விமானப்படைத் தளபதி கிண்ண கோல்ஃவ் போட்டியில் ஓய்வுபெற்ற விங் கமாண்டர் லக்மல் குணவர்தன ஆண்கள் சாம்பியன்ஷிப்பை வென்றதுடன், மூத்த வீராங்கனை பிரவீனா துனுவில பெண்கள் சாம்பியன்ஷிப்பை வென்றார்.

# மட்டு.- பொலனறுவை பிரதான வீதி போக்குவரத்து இடைநிறுத்தம்






மட்டக்களப்பு நிருபர்

மட்டக்களப்பு - பொலனறுவை பிரதான வீதிப் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மகாவலி கங்கையின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால் மட்டக்களப்பு - பொலனறுவை பிரதான வீதி நேற்றுமுன்தினம் (19) மாலை 5.00 மணிக்குப் பிறகு கல்லேல்லயிலிருந்து மன்னம்பிட்டி வரையான பகுதியில் அனைத்து வாகனங்களும் பயணிக்க முடியாதவாறு முழுமையாக மூடப்பட்டுள்ளதென பொலனறுவை மாவட்ட ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.


எனவே, வெலிகந்த - திம்புலாகலை மற்றும் மட்டக்களப்பு நோக்கிப் பயணிக்கும் பயணிகளின் நன்மைகருதி ரயில் சேவையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதென பொலனறுவை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

வீதியின் நிலையை இன்று காலை பரிசீலனை செய்த பின்னர், மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து அறிவிக்கப்படுமென்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதி பதவியேற்றார் டொனால்ட் ட்ரம்ப்







அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் நேற்று (20) பதவியேற்றார். புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற ட்ரம்ப்புக்கு அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஜோன் ரொபர்ட்ஸ் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றவுடனேயே சட்டவிரோத குடியேற்றவாசிகள் வெளியேற்றம், தெற்கு எல்லையை மூடுவது, எண்ணெய் மற்றும் எரிவாயு எடுப்பதிலுள்ள தடைகளை அகற்றுவது உட்பட 100இற்கும் மேற்பட்ட நிர்வாக உத்தரவுகளில் அவர் கையெழுத்திடுவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் பதவியேற்பு விழா கேபிடல் கட்டட வளாகத்தின் திறந்தவெளியில் நடைபெறுவது வழக்கம். ஆனால், அங்கு கடும் குளிர் நிலவுமென வானிலை முன்னறிவிப்பு வெளியிடப்பட்டதால், பதவியேற்பு நிகழ்வு கேபிடல் கட்டடத்தின் ரோட்டுண்டா அரங்கில் நடத்தப்பட்டது. ட்ரம்ப் பதவியேற்பு நிகழ்ச்சியில் பொதுமக்கள் பங்கேற்க ஏற்கனவே 2,20,000 ரிக்கெட்டுகள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், பதவியேற்பு விழா நிகழ்ச்சி உள்ளரங்குக்கு மாற்றப்பட்டதால் அதில் 600 பேர் மட்டுமே பங்கேற்க முடியும்.

அதனால் பதவியேற்பு விழாவின் நேரடி ஒளிபரப்பை ட்ரம்ப் ஆதரவாளர்கள் பார்ப்பதற்கு கேபிடல் ஒன் விளையாட்டரங்கில் சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு 20,000 பேர் பங்கேற்க முடியும். புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற ட்ரம்ப்புக்கு அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஜோன் ரொபர்ட்ஸ் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் துணை ஜனாதிபதியாக ஜே.டி.வோன்ஸ் பதவியேற்றார். பதவியேற்ற பின் புதிய ஜனாதிபதி ட்ரம்ப் உரையாற்றினார். இதனையடுத்து புதிய ஜனாதிபதி ட்ரம்ப் நாட்டுமக்களுக்கு தமது முதல் உரையை நிகழ்த்தினார். இதில் அடுத்த 4 ஆண்டுகளில் அவர் மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் குறித்து அறிவித்துள்ளார்.

**சூரியன் மறையும்போது எல்லையில் ஊடுருவல் நிற்கும்!**

பதவியேற்புக்கு முன்னதாக வொஷிங்டனுக்கு வருகைதந்த ட்ரம்ப், கேபிடல் ஒன் அரங்கில் கூடியிருந்த தனது ஆதரவாளர்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் (19) இரவு வெற்றியுரையாற்றினார்.

அப்போது, ''நாளை (நேற்று -20) சூரியன் மறையும் நேரத்தில் அமெரிக்க எல்லையில் ஊடுருவல் என்பது முற்றிலும் நிற்கும்'' என்று ஆதரவாளர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், "வெனிசுலாவிலிருந்து அலை அலையாக அமெரிக்காவுக்குள் நுழைந்த ட்ரென் டி அரகுவா அமைப்பின் உறுப்பினர்கள் வெளியேற்றப்படுவார்கள்.

அமெரிக்க வரலாற்றில் ஜனாதிபதியின் மிகச் சிறந்த முதல் நாள் அமையவிருக்கிறது. மிகவும் அசாதாரணமான முதல் 100 நாட்களை மக்களுக்கு வழங்கப்போகிறோம்.

நாடு எதிர்கொள்ளும் ஒவ்வொரு நெருக்கடியையும் சரிசெய்வதற்கான பல உத்தரவுகளை இயற்றவுள்ளேன். ஜோ பைடன் வெளியிட்ட பல உத்தரவுகளை இரத்து செய்வேன்.


ட்ரம்புடன் முகேஸ் அம்பானி

நான்கு ஆண்டுகால அமெரிக்க வீழ்ச்சிப் பாதை மூடப்படும். வலிமை, செழிப்பு, கண்ணியம் மற்றும் பெருமையின் புத்தம் புதிய காலத்தை அமெரிக்கா தொடங்கும்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ். கென்னடி, செனட்டர் ரொபர்ட் கென்னடி மற்றும் சிவில் உரிமைகள் தலைவர் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் ஆகியோரின் படுகொலைகள் தொடர்பான மீதமுள்ள ஆவணங்களை வெளியிடுவேன்" எனத் தெரிவித்தார்.

கடந்த 2017 தேர்தலின்போதும் இதேபோன்ற வாக்குறுதியளித்த ட்ரம்ப், கொலைகள் தொடர்பான சில இரகசிய ஆவணங்களை மட்டுமே வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

ட்ரம்ப் பதவியேற்பு விழா கொண்டாட்டங்கள் அமெரிக்காவில் சனிக்கிழமையே தொடங்கிவிட்டன. வேர்ஜினியா மாகாணத்திலுள்ள ட்ரம்ப் நேசஷனல் கோல்ப் கிளப்பில் சனிக்கிழமை இரவு நடைபெற்ற விருந்து நிகழ்வில் அவரது அமைச்சரவை உறுப்பினர்கள் உட்பட ட்ரம்ப் விருந்தினர்கள் 500 பேர் பங்கேற்றனர். இங்கு நடைபெற்ற கொண்டாட்ட நிகழ்ச்சிகளை ட்ரம்ப் மற்றும் அவரது மனைவி மெலானியா ஆகியோர் கோல்ப் கிளப் பால்கனியிலிருந்து கண்டு ரசித்தனர். அங்கு நடைபெற்ற இசை நிகழ்ச்சிகளை ட்ரம்ப் ரசித்தார். விருந்தினர்களுடன் சேர்ந்து தனது வழக்கமான ஸ்டைலில் ட்ரம்ப் நடனம் ஆடினார்.

அமெரிக்க ஜனாதிபதியின் பதவியேற்பு விழாவுக்கு வெளிநாட்டுத் தலைவர்களை அழைப்பது வழக்கமில்லை. ஆனால், இந்தத் தடவை ட்ரம்ப் வெளிநாட்டுத் தலைவர்கள் சிலருக்கு அழைப்பு விடுத்துள்ளார். இத்தாலி பிரதமர் ஜியார்ஜியா மெலோனி இந்நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். ஹங்கேரி, ஆர்ஜென்டினா, சீனா ஜனாதிபதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

மேலும், இந்நிகழ்வில் பதவியிலிருந்து வெளியேறும் ஜோ பைடன், துணை ஜனாதிபதி பதவியிலிருந்து வெளியேறும் கமலா ஹரிஸ் ஆகியோர் பங்கேற்றனர். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகளான பில் கிளின்டன், ஜோர்ஜ் டபிள்யூ புஷ், பராக் ஒபாமா ஆகியோரும் பங்கேற்றனர்.

அமெரிக்காவின் கோடீஸ்வர தொழிலதிபர்கள் எலான் மஸ்க், ஜெப் பெசாஸ், மார்க் ஜூகர்பெர்க் உட்பட பலர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர். இந்தியாவிலிருந்து வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், தொழிலதிபர் முகேஸ் அம்பானி ஆகியோர் ட்ரம்ப் பதவியேற்பு விழாவில் பங்கேற்றனர்.



**அமுலுக்கு வந்த இஸ்ரேல் – ஹமாஸ் போர் நிறுத்தம்:**

# 3 பணயக்கைதிகளுக்குப் பதிலாக 90 பலஸ்தீனர்கள் விடுவிப்பு



இஸ்ரேல் - ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்துள்ள நிலையில், முதல் நாளில் 3 பணயக் கைதிகளை ஹமாஸும், பதிலுக்கு 90 பலஸ்தீன கைதிகளை இஸ்ரேலும் விடுவித்துள்ளன.

ஹமாஸ் அமைப்பினரால் சுமார் 471 நாட்களுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்ட பணயக்கைதிகள் 3 பேர், இஸ்ரேலைச் சென்றடைந்துள்ள நிலையில், ''மீதமுள்ள பணயக்கைதிகளை மீட்பேன்'' என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு உறுதியளித்துள்ளார்.

ரோமி கோனென், டோரன் ஸ்டெய்ன்பிரெச்சர் மற்றும் எமிலி டமரி ஆகியோர் இஸ்ரேலிலுள்ள தங்கள் தாய்மார்களுடன் மீண்டும் இணைந்தனர். அவர்கள் 3 பேரும் நலமாக இருக்கிறார்களென இஸ்ரேல் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையில் சுமார் 15 மாதங்களுக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் (19) போர்நிறுத்தம் அமுலுக்கு வந்த நிலையில், முதல் நாளாக இரவுப் பொழுது குண்டு - துப்பாக்கித் தாக்குதல்கள் இல்லாமல் காஸா மக்கள் கழித்தனர். குறிப்பாக, மனிதாபிமான உதவிப்பொருட்களுடன் 630 ட்ரக்குகள் காஸாவுக்குள் சென்றுள்ளன. இவற்றில் 300 ட்ரக்குகள் போரால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு காஸாவுக்குள் சென்றன.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி தொடங்கிய நிலையில், இப்போர் ஓராண்டைக் கடந்தும் நீடித்து வந்தது. இந்நிலையில், கடந்த 15 மாதங்களாக காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்களில் 46,913இற்கும் மேற்பட்ட பஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 1,10,750இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.



இந்நிலையில், இஸ்ரேல் -ஹமாஸ் ஆகிய இரு தரப்புகளுக்கிடையே போர் நிறுத்தம் ஏற்படுத்த கட்டார், அமெரிக்கா சார்பில் பல கட்டப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பணயக்கைதிகளை விடுவித்தால் போரை நிறுத்துவதாக இஸ்ரேல் நிபந்தனை விதித்தது.

இதேவேளை, பணயக்கைதிகளின் பட்டியலை அனுப்ப ஹமாஸ் தாமதப்படுத்தியதால் 3 மணிநேரம் தாமதமாக போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது. போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வருவது தாமதமானதால் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் 13 பேர் கொல்லப்பட்டனர்.

**'துப்பாக்கிகள் மௌனித்துள்ளன..'**

போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவிக்கையில், "இறுதியாக மிகுந்த வலி, பேரழிவு, உயிரிழப்புகளுக்குப் பின்னர் இன்று காஸாவில் துப்பாக்கிகள் மௌனித்துள்ளன, முதற்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தக் காலத்தில் குறைந்தது 2 அமெரிக்கர்களையாவது ஹமாஸ் விடுவிக்கும்" - என்றார்.

# "வளர்ச்சி முக்கியம்தான். ஆனால், வளர்ச்சி என்ற பெயரில் மக்களை அழிக்காதீர்!!"



## பரந்தூரில் விஜய் பரபரப்பு பேச்சு

''வளர்ச்சி முக்கியம்தான், ஆனால், வளர்ச்சி என்ற பெயரில் மக்களை அழிக்காதீர்கள். விமான நிலையத் திட்டத்தை எதிர்க்கவில்லை. ஆனால், விவசாய நிலங்கள் இல்லாத பகுதியில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்துங்கள். நான் வளர்ச்சிக்கு எதிரானவன் அல்லன்'' - என த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் அமையவுள்ள பசுமைவெளி விமான நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏகனாபுரம் உட்பட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கிராம மக்களையும், போராட்டக்குழுவினரையும் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் சந்தித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிட்டத்தட்ட 910 நாட்களுக்கு மேலாக உங்க மண்ணுக்காக போராடிக் கொண்டு இருக்கிறீர்கள். உங்க போராட்டத்தைப் பற்றி ராகுல் என்ற சின்ன பையன் பேசுவதைக் கேட்டேன். அந்தக் குழந்தையின் பேச்சு மனதை ஏதோ செய்தது. உடனே உங்க எல்லாரையும் சந்தித்துப் பேச வேண்டும் என்று தோணுச்சு.





உங்கள் எல்லோரும் கூட தொடர்ந்து நிற்பேன். ஒவ்வொரு வீட்டுக்கும் ரொம்ப முக்கியமானவர்கள் அந்த வீட்டிலிருக்கும் பெரியவர்கள்தான். அதே மாதிரி நம்ம நாட்டுக்கு ரொம்ப முக்கியமானவர்கள் உங்களை மாதிரி விவசாயிகள்தான். அதனால் உங்கள மாதிரியான விவசாயிகளின் காலடி மண்ணை தொட்டு கும்பிட்டுதான், என்னுடைய பயணத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவோடு இருந்தேன். அதற்கு சரியான இடம் இதுதான் என்று எனக்கு தோணுச்சு.

என்னை உங்க வீட்டிலிருக்கும் மகனாக பாருங்கள், என்னுடைய கள அரசியல் பயணம் உங்களுடைய ஆசீர்வாதத்துடன் இங்கிருந்துதான் ஆரம்பிக்கிறது. நமது முதல் மாநில மாநாட்டில் கட்சியின் கொள்கையை பற்றி எடுத்துச் சொன்னேன். அதுல ஒன்று தான், இயற்கை வள பாதுகாப்பு. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய, இயற்கைக்கு பிரச்சினை விளைவிக்காத, பகுதிசார் மாநில வளர்ச்சி பரவலாக்கம் நாம் அறிவித்த கொள்கை. இதை நான் இங்கு சொல்வதற்குக் காரணம், ஓட்டு அரசியலுக்காக அல்ல.

இன்னொரு தீர்மானம், விவசாயிகள் நிலங்கள் பாதுகாப்புக் கொள்கை தீர்மானம். அதுல, காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் 13 நீர்நிலைகளை அழித்து, சென்னையை நிரந்தரமாக வெள்ளக்காடாக்கும் திட்டத்தை மத்திய, மாநில அரசுகள் கை விட வேண்டுமென வலியுறுத்தினேன். இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும், நமது விவசாயிகளைப் பாதிக்கும் திட்டத்திற்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தவும் தயங்க மாட்டோம் என்று சொல்லியிருந்தோம்.

இந்தப் பிரச்சினையில் உங்களுடன் நான் உறுதியாக நிற்பேன். இன்னொரு முக்கியமான விடயம், நம்மை ஆட்சி செய்துகொண்டிருக்கும் மத்திய, மாநில அரசுக்கு நான் சொல்ல வேண்டுமென நினைக்கிறேன். நான் வளர்ச்சிக்கு எதிரானவர் அல்லன். எயார்போர்ட்டே வரக் கூடாது என்று சொல்லவில்லை. இந்த இடத்தில் வரக் கூடாது என்றுதான் சொல்கிறேன். இதை நான் சொல்லவில்லையென்றால், இவன் வளர்ச்சிக்கு எதிரானவன் என்று கதையை கட்டி ஆரம்பித்துவிடுவார்கள். சரி நமக்கு அதைப் பற்றியெல்லாம் கவலையில்லை.

எல்லாத்துக்கும் மேல, இந்தப் பூமியில் வாழும் உயிரினங்கள் இருப்பையும் புவி வெப்பமயமாதல் பயமுறுத்திக்கொண்டு இருக்கிறது. அதனுடைய ரிசல்ட்தான் மழை காலத்தில் சென்னை சிட்டி தத்தளித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஒவ்வொரு வருடமும், சென்னை வெள்ளத்துக்குக் காரணம் சதுப்பு நிலங்களை அழிப்பதுதான். இப்படி ஒரு சூழல் இருக்கும் போது 90 சதவீத நீர்நிலைகள், விவசாய நிலங்களை அழித்து விமான நிலையத்தை கொண்டுவர வேண்டுமென்ற முடிவை எடுத்தது எந்த அரசாக இருந்தாலும், அது மக்கள் விரோத அரசாகத்தான் இருக்க முடியும்.

எனது கள அரசியல் பயணம் பரந்தூரிலிருந்து தொடங்குகிறது. எதிர்க்கட்சியாக இருக்கும்போது விவசாயிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டையும், ஆளுங்கட்சியாக இருக்கும்போது விவசாயிகளுக்கு எதிர்ப்பான நிலைப்பாட்டையும் ஆளும் அரசு எடுக்கிறது. உங்கள் நாடகத்தைப் பார்த்துக்கொண்டு பொதுமக்கள் இனியும் அமைதியாக இருக்கமாட்டார்கள்.

வளர்ச்சி முக்கியம்தான், ஆனால் வளர்ச்சி என்ற பெயரில் மக்களை அழிக்காதீர்கள். விமான நிலைய திட்டத்தை எதிர்க்கவில்லை. ஆனால், விவசாய நிலங்கள் இல்லாத பகுதியில் இந்த திட்டத்தை அமல்படுத்துங்கள் என தெரிவித்துள்ளார்.

# யாழ். திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தின் பெயர்ப்பலகையில் தமிழ் மொழிக்கு மூன்றாவது இடம்

## அமைச்சர் சந்திரசேகரன் ஆதங்கம்

''யாழில் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தின் பெயர்ப்பலகையில் தமிழ் மொழிக்கு மூன்றாவது இடம் கொடுக்கப்பட்டிருந்ததைப் பார்த்து அதிர்ச்சியுற்றேன்'' – என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - பலாலி வீதி, கந்தர் மடப்பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் காரியாலயத்தை நேற்று திங்கட்கிழமை (20) திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் திறந்துவைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார மையமானது திருவள்ளுவர் கலாசார மையம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் நானும் அதிதியாகக் கலந்து



கொண்டவன் என்ற வகையில் பெயர் மாற்றம் தொடர்பில் திரைநீக்கத்தின்போது தான் அவதானித்தேன்.

'திருவள்ளுவர் கலாசார மையம்' எனப் பெயர் மாற்றியது குற்றமல்ல. யாழ்ப்பாணத்துக்கே உரித்தான பெயர்களான யாழ். கலாசார மையம் அல்லது யாழ். பண்பாட்டு மையம் என்ற பெயர் சூட்டியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்து. பெயர் சூட்டும் நிகழ்வில் திருவள்ளுவர் கலாசார மையம் என காட்சிப்படுத்தப்பட்ட இலத்திரனியல் திரையில் தமிழுக்கு மூன்றாவது இடம் வழங்கப்பட்டமை கவலை தரும் விடயமாக இருந்தது. அதனைப் பார்த்து நான் அதிர்ச்சியடைந்தேன்.

தமிழ் மக்கள் வாழும் பகுதியில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். சிலவேளை தெரியாமல் சில தவறுகள் இடம்பெற்றிருக்கக்கூடும்.குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் நான் இன்னும் கலந்துரையாடவில்லை. நிச்சயமாக அது தொடர்பில் கலந்துரையாடி இனிவரும் காலங்களில் தவறுகள் இடம்பெறாவண்ணம் செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

# கொள்வனவாளர்களால் நெல் நிறுவையில் மோசடி

(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி, பரந்தன், குமரபுரம் பகுதியில் நேற்று முன்தினம் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்பட்டபோது கொள்வனவாளர்களால் அளவை நிறுவையில் மோசடி செய்யப்பட்டமை பொதுமக்களால் கண்டறியப்பட்டுள்ளது.

நெல் கொள்வனவுக்காக பாரவூர்தியில் வருகை தந்த குழுவினர் பரந்தன் பகுதியில் நெல் கொள்வனவில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது பொதுமக்களுக்கு அவர்களின் தராசு மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து தராசு பொதுமக்களால் கைப்பற்றப்பட்டு சோதனையிடப்பட்டபோது ஓர் உரப்பை நெல் மூடைக்கு பத்து கிலோ குறைவாகக் காட்டும் வகையில் தராசு மாற்றப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து பாரவூர்தியில் ஏற்றப்பட்ட நெல் இறக்கப்பட்டு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்று பொலிஸார் விவசாயிகளின் முறைப்பாட்டை பதிவுசெய்ததோடு, பிறிதொரு தராசில் நெல் மீளவும் நிறுக்கப்பட்டபோது ஒரு விவசாயியிடமிருந்து சுமார் 24 ஆயிரம் ரூபாவுக்கு குறைத்துக் காட்டப்பட்டு நெல் கொள்வனவு செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டு அப்பணம் மீளவும் விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மிகவும் நெருக்கடிகளுக்கு மத்தியில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு ஒருபுறம் நோய்த் தாக்கம் இன்னொரு புறம் அறுவடை நேரத்தில் பெய்கின்ற மழை காரணமாக ஏற்படுகின்ற பாதிப்பு என பலவற்றைக் கடந்து நெல்லை அறுவடை செய்து விற்பனை செய்கின்றபோது அதற்கான நியாயமான விலை கிடைப்பதில்லை. இவ்வாறு பல பாதிப்புகளுக்கு முகங்கொடுத்து வருகின்ற நிலையில், கொள்வனவாளர் மனச்சாட்சியின்றி அளவை நிறுவையில் மோசடி செய்வது மிகுந்த வேதனையைத் தருகிறது. எனவே, இனிவரும் காலங்களில் நெல் கொள்வனவாளர்கள் தொடர்பில் விவசாயிகள் அவதானமாக இருக்கவேண்டுமெனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரத்ததான முகாம் முன்னெடுப்பு




(சாவகச்சேரி நிருபர்)

விதையனைத்தும் விருட்சமே அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (19) சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கி ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் விதையனைத்தும் விருட்சமே அமைப்பு, கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் ஆகியன இணைந்து மேற்படி இரத்ததான முகாமை ஏற்பாடு செய்திருந்தன.

மேற்படி இரத்ததான முகாமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அத்தியட்சகர் வைத்தியர் ரஜீவ் சம்பிரதாயபூர்வமாக



ஆரம்பித்து வைத்திருந்தார்.

இதன்போது வைத்தியசாலை பணியாளர்கள், விதையனைத்தும் விருட்சம் அமைப்பைச் சேர்ந்த தொண்டர்கள், பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு குருதிக்கொடையை வழங்கியிருந்தனர்.

# கலாசார மையத்தின் பெயர் மாற்றம் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும்

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(பு.கஜிந்தன்)


யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கலாசார மையத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது - என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார் .

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

ஈழத் தமிழர்களின் கலாசார பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதை நோக்கமாகக்கொண்டு இந்திய அரசால் வழங்கப்பட்ட இந்தக் கலாசார மையம் தமிழ் மக்களின் அடையாளமாகத் தற்போது விளங்குகின்றது.

கடந்த 2010ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட வேளையில், அப்போதைய பாரதப் பிரதமர் மன்மோகன் சிங், தலைமையிலான அரசாங்கத்திடம் என்னால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமையவே குறித்த கலாசார மையத்தை இந்தியா எமக்களித்தது.

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் அதனை நிர்மாணிப்பதற்கான



ஆரம்பகட்டப் பணிகள் அனைத்தும் எம்மாலேயே முன்னெடுக்கப்பட்டிருந்தன. இவ்வாறான பின்னணியிலேயே குறித்த பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

உலகப் பொதுமறையான திருக்குறளை எமக்களித்த திருவள்ளுவர் எமது மதிப்புக்குரியவர். அவரையும் அவருடைய ஆளுமையையும் போற்றிப் புகழ்வதில் தமிழர்கள் யாருமே பின்நிற்கப்போவதில்லை. கடந்த காலங்களில் இந்திய அரசால் வழங்கப்பட்ட திருவள்ளுவர் சிலைகளை எமது மக்கள் ஆர்வத்துடனும் பெருமிதத்துடனும் பிரதிஷ்டை செய்து பராமரித்து வருகின்றனர்.

எனினும், இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களின் அடையாளங்களுள் ஒன்றான யாழ்ப்பாணம் என்ற பெயர் நீக்கப்பட்டிருப்பதானது, தமிழ் மக்களின் அடையாளங்களை அழிக்க முனைகின்ற தீய சக்திகளின் மறைகரம் இந்தப் பெயர் மாற்றத்தின் பின்னணியில் இருக்குமோ என்ற நியாயமான சந்தேகத்தை எமது மக்களுக்கு ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான சந்தேகங்கள், இந்த நாட்டிலே புரையோடிப் போயிருக்கின்ற தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவசியமான தேசிய நல்லிணக்க முயற்சிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற வகையில், இதனுடன் நேரடியாக தொடர்புபட்டிருந்த இந்தியத் தூதரக அதிகாரிகள், இலங்கையின் தற்போதைய புத்தசாசன சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் கடற்றொழில் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர் போன்றோர் பெயர் மாற்றப்பட்டமைக்கான காரணம் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# முல்லைக் கடற்கரையில் பட்டத் திருவிழா







(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு கடற்கரையில் நேற்று முன்தினம் (19) பட்டத் திருவிழா இடம்பெற்றது.

பிரான்ஸில் புலம்பெயர்ந்து வாழும் முல்லைத்தீவு - வட்டுவாகல் கிராமத்தைச் சேர்ந்த உறவுகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பட்டத் திருவிழாவில்



பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றிருந்தார்.

அந்தவகையில், விருந்தினர் வரவேற்புடன் தொடங்கிய இந்நிகழ்வில் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது.

அதனையடுத்து விருந்தினர்களால் சிறார்களிடம் பட்டங்கள் கையளிக்கப்பட்டு குறித்த பட்டத் திருவிழா வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் சிறார்கள் முதல் பெரியோர் வரை இணைந்து இந்தப் பட்டம் விடும் திருவிழாவில் பங்கேற்றிருந்ததுடன் முல்லைத்தீவு கடற்கரையெங்கும் அழகிய வண்ணப்பட்டங்கள் வானை அலங்கரித்தன.

மேலும், இந்நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன், கரைதுறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் திருமதி இராஜயோகினி ஜெயக்குமார், வட்டுவாகல் அறநெறிப் பாடசாலையின் முதல்வர் அப்புத்துரை செல்வரட்ணம் ஆகியோருடன்,



பெருந்திரளான மக்களும் இந்த பட்டத் திருவிழாவில் கலந்து மகிழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் தோட்டக்காட்டுப் பகுதியில் இளம் பெண்ணின் சடலம் மீட்பு

(ஜோசப் நயன்)

மன்னார் தோட்டக்காடு ரயில் கடவையின் அருகில் இளம் பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.



நேற்று அதிகாலை 4.30 மணியளவில் தலைமன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில் மோதி பெண் உயிரிழந்திருக்கலாம் எனத் சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த பெண் மன்னார் ஜீவபுரம் பகுதியில் வசித்து வந்துள்ள நிலையில் வெள்ளம் காரணமாக தற்காலிகமாக தோட்டக்காட்டிலுள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்த நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மரணம் தொடர்பில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அடம்பனில் சிறப்பாக இடம்பெற்ற பண்பாட்டியல் பொங்கல் விழா



(ஜோசப் நயன்)

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் தைத்திருநாள் பொங்கல் விழா பண்பாட்டியல் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (19) முற்பகல் 11 மணியளவில் மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக அடம்பன் மத்திய மகா வித்தியாலய பாடசாலை அதிபர் மை.கிறிஸ்ரியான் உட்பட அடம்பன் பங்குத்தந்தை சீமான், சட்டத்தரணி சபுர்தீன், தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



தைத்திருநாள் பொங்கல் விழா பண்பாட்டியல் நிகழ்வின் ஓர் அங்கமாக வரவேற்பு நடனம், கிராமிய நடனம், கவிதை, பேச்சு, குழுப்பாடல், நவீனம் குறியீட்டு நாடகம், கருத்துக்களம் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், தமிழ்ச் சங்கத்தால் விருந்தினர்களுக்கு நினைவுச்சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# விளையாட்டுத் துளிகள்




## சுழற்பந்தில் போட்டியை வென்றெடுத்த பாகிஸ்தான்

சுற்றுலா மே.இ.தீவுகள் அணியுடன் நடைபெற்ற முதல் டெஸ்டில் பாகிஸ்தான் அணி, சுழற்பந்துவீச்சாளர்களின் ஆதிக்கம் மூலம் 127 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியீட்டியது.

பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி முல்தானில் நடந்தது.

பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 230 ஓட்டங்கள் எடுத்தது. ஷகீல் 84 ஓட்டங்களும் ரிஸ்வான் 71 ஓட்டங்களும் எடுத்தனர். பதிலுக்கு முதல் இன்னிங்ஸை ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் 137 ஓட்டங்களுக்குச் சுருண்டது. அதனைத் தொடர்ந்து 93 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த பாகிஸ்தான் அணி 157 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 251 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

அதன்படி களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி பாகிஸ்தானின் சுழற்பந்துவீச்சுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் 123 ஓட்டங்களுக்கு சுருண்டுபோக பாகிஸ்தான் அணி 127 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக 9 விக்கெட்டுகளை வீழ்த்திய சஜித் கான் தெரிவானார். இரண்டாவது டெஸ்ட் இதே மைதானத்தில் 25ஆம் திகதி ஆரம்பமாகிறது.

ICC U-19 Women's T20 World Cup - 2025

## இன்று மே.இ. தீவுகளை எதிர்கொள்ளும் இலங்கை

மலேசியாவில் நடைபெற்றுவரும் ஐ.சி.சி. இளையோர் (19 வயதுக்குட்பட்டோருக்கான) மகளிர் ரி20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இலங்கை மகளிர் அணி தங்களது இரண்டாவது ஆட்டத்தில் இன்று மேற்கிந்தியத் தீவுகள் இளையோர் மகளிர் அணியை எதிர்கொள்கிறது.

16 அணிகளின் பங்கேற்புடன் இரண்டாவது தடவையாக நடைபெற்றுவரும் ஐ.சி.சி. இளையோர் (19 வயதுக்குட்பட்டோருக்கான) மகளிர் ரி20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் சனிக்கிழமை மலேசியாவில் ஆரம்பமானது. இதில் குழு 'ஏ'யில் இடம்பிடித்துள்ள இலங்கை அணி தங்களது முதல் ஆட்டத்தில் நேற்று முன்தினம் கோலாலம்பூர், பயூமாஸ் ஓவல் மைதானத்தில் வைத்து மலேசியாவை எதிர்கொண்டது. இந்த ஆட்டத்தில் இலங்கை அணி 139 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியீட்டியது.

இந்நிலையில், இலங்கை அணி இரண்டாவது ஆட்டத்தில் இன்று மே.இ. தீவுகள் மகளிர் அணியை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

மறுமுனையில் மே.இ. தீவுகள் மகளிர் அணி தங்களது முதல் ஆட்டத்தில் இந்தியாவிடம் படுதோல்வியடைந்த நிலையில் இன்றைய போட்டியில் வெற்றிபெறும் முனைப்பில் உள்ளது.

இலங்கை அணி தங்களது கடைசி லீக் ஆட்டத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை இந்திய இளையோர் மகளிர் அணியை எதிர்கொள்கிறது.






★ பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர் ஷகிப் அல்-ஹசனுக்குப் பிடியாணை பிறப்பித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. காசோலை மோசடி சம்பவம் தொடர்பாக அந்நாட்டு ஐ.எவ்.ஐ.சி. வங்கி தொடர்ந்த வழக்கையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர் கொடுத்த காசோலைகளின் மதிப்பு 4.15 கோடி பங்களாதேஷ் டக்கா என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவர் தற்போது அமெரிக்காவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.




★ 32ஆவது விஜய் ஹசாரே கிண்ணத் தொடரில் கர்நாடகா அணி 5ஆவது முறையாக (2014, 2015, 2018, 2020, 2025) சம்பியன் பட்டம் வென்றதன் மூலம் விஜய் ஹசாரே கிண்ண வரலாற்றில் அதிக முறை சம்பியன் பட்டம் வென்ற தமிழக அணியின் சாதனையை கர்நாடகா சமன் செய்தது.

★ இந்திய மகளிர் அணியுடனான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டியில் அயர்லாந்து அணி குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்துவீசி முடிக்காததால் அணியிலுள்ள ஒவ்வொரு வீராங்கனைக்கும் போட்டி கட்டணத்திலிருந்து தலா 10 சதவீதம் அபராதம் விதித்து ஐ.சி.சி. உத்தரவிட்டுள்ளது.

★ இந்திய அணியின் உதவிப் பயிற்சியாளர் அபிஷேக் நாயர், அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளர் பணியை கவனித்தார். இந்நிலையில், இந்திய அணியின் புதிய துடுப்பாட்டப் பயிற்சியாளராக இந்திய 'ஏ' அணியின் தலைமைப் பயிற்சியாளர் சிதான்ஷு கோடக் நியமிக்கப்பட்டுள்ளார். 22ஆம் திகதி ஆரம்பமாகும் இங்கிலாந்துக்கு எதிரான தொடருடன் அவரது பதவிக்காலம் ஆரம்பமாகிறது.





★ டுபாயில் நடைபெற்றுவரும் இன்டர்நெஷனல் ரி20 லீக் போட்டியில் மும்பை எமிரேட்ஸ் அணியில் விளையாடும் வெஸ்ட் இண்டீஸ் அணியின் முன்னாள் வீரர் கிரண் பொல்லார்ட் ரி20 கிரிக்கெட்டில் தனது 900 சிக்சர்களை நிறைவு செய்தார். இதன்மூலம் ரி20 கிரிக்கெட் வரலாற்றில் கிரிஸ் கெய்லுக்கு அடுத்து இந்த மைல்கல்லை எட்டிய உலகின் 2ஆவது வீரர் எனும் சாதனையையும் படைத்தார். ரி20 கிரிக்கெட் அதிக சிக்ஸரில் முதல் 4 இடங்களில் வெஸ்ட் இண்டீஸ் அணி வீரர்களே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

★ ஆஸி. ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் நவோமி ஒசாகா (ஜப்பான்) மற்றும் பெலிண்டா பென்சிக் (சுவிஸ்) ஆகியோர் மோதிய ஆட்டத்தின்போது முன்னாள் சம்பியனான ஒசாகா உபாதைக்குள்ளாகி தொடரிலிருந்து சோகத்துடன் வெளியேறினார்.






## இலங்கையுடனான டெஸ்ட் தொடரில் ஆடுவாரா ஸ்மித்?

இலங்கை அணியுடன் நடைபெற்ற டெஸ்ட் தொடருக்காக அவுஸ்திரேலிய அணியின் தலைவராக நியமிக்கப்பட்ட ஸ்ரீவன் ஸ்மித் தற்போது முழங்கை உபாதைக்குள்ளாகியிருக்கும் நிலையில் அவரது பங்கேற்பில் சந்தேகம் எழுந்துள்ளது. கடந்த காலங்களிலும் முழங்கை பிரச்சினைக்கு முகங்கொடுத்திருக்கும் ஸ்மித், நடப்பு பிக்பாஷ் லீக் தொடரில் சிட்னி சிக்ஸர்ஸ் அணிக்காக களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தபோது உபாதைக்குள்ளானார்.

இதனால் ஸ்மித் டுபாயில் நடைபெறும் ஆஸி. டெஸ்ட் குழாமில் பயிற்சி முகாமுக்கு செல்வதில் தாமதம் ஏற்பட்டிருப்பதோடு, மருத்துவ ஆலோசனையைப் பெறவுள்ளார். எனினும், அவர் இந்த வார கடைசியில் புறப்பட்டுச் செல்வாரென்று எதிர்பார்ப்பதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஸ்மித் இலங்கை சுற்றுப்பயணத்தில் பங்கேற்காத பட்சத்தில் அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரரான டிரவிஸ் ஹெட் முதல்முறை அந்த அணியின் தலைவராகச் செயற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதேபோன்று பிக்பாஷ் லீக் தொடரின்போது கடந்த வாரம் பிரிஸ்பேன் ஹீட் அணிக்காக ஆடியபோது கட்டைவிரலில் காயம் ஏற்பட்டு சத்திரசிகிச்சையை எதிர்கொண்டிருக்கும் இடது கை சுழல் வீரர் மத்தியூ கொன்மானும் இலங்கை சுற்றுப்பயணத்தில் பங்கேற்பதில் எதிர்பார்ப்பு நிலவி வருகிறது. இலங்கை – ஆஸி. அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி காலியில் ஆரம்பமாகிறது.

## மூன்றாவது திருக்கோ ரி20 லீக் ஆரம்பம்

**(கிண்ணியா நிருபர்)**



திருக்கோ ரி20 லீக் 2025இல் மூன்றாவது பருவத்துக்கான ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை (18) திருகோணமலை மக்கேய்சர் மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் கலந்துகொண்டு அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்தப் பருவத்தில் 12 அணிகள் பங்கேற்கின்றன. இந்தப் போட்டிகள் 2025 ஜனவரி 18, 19, 24, 25 மற்றும் பெப்ரவரி 01, 02 ஆகிய திகதிகளில் நடைபெறும். திருக்கோ சுப்பர் 40 கிரிக்கெட் கிளப் இந்தப் போட்டியை ஒழுங்கமைக்கின்றது. இந்த லீக், கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒரு சிறந்த அனுபவத்தை வழங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. 12 அணிகள், தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றிக்காக போட்டியிடும்.

இந்த ரி20 லீக், கிரிக்கெட் ரசிகர்களுக்கு மட்டுமல்லாமல், இளம் வீரர்களுக்கும் ஓர் அரிய வாய்ப்பாக இருக்கும். அவர்கள் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி, எதிர்காலத்தில் பெரிய அணிகளில் விளையாட வாய்ப்புப் பெறலாம்.

## பதக்கம் வென்ற பொலிஸ் பரிசோதகருக்கு வரவேற்பு

**(ஜே.எம்.ஹாபீஸ்)**



இந்தியாவில் இடம்பெற்ற தென் ஆசிய முன்னாள் வீரர்களது மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் பதக்கங்களை வென்ற தெல்தெனிய பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் தம்மிக்க ராஜபக்ஷ தெல்தெனிய பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் வைத்துப் பாராட்டப்பட்டார்.

தெல்தெனிய பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ரொசான் அமரசிங்க மற்றும் தெல்தெனிய பொலிஸ் தலைமையகப் பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.பீ.சேனாதீர உட்பட பல அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

இந்தியாவில் இடம்பெற்ற போட்டியில் இலங்கை சார்பாக பங்கு கொண்ட தம்மிக்க ராஜபக்ஷ ஒரு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் என்பவற்றைப் பெற்றுக்கொண்டார். அதாவது, 400 மீற்றர் தடைதாண்டி ஓடும் போட்டியில் வெள்ளிப்பதக்கமும் 1500 மீற்றர் சமதரை ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கமும் 400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் தங்கப்பதக்கமும் வென்றார்.

## அதிர்ச்சித் தோல்வியுடன் வெளியேறிய உலகின் முன்னணி வீரர்

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான ஆஸி. ஓபன் டென்னிஸ் தொடர் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெற்றுவரும் நிலையில், உலகின் ஐந்தாம் நிலை நட்சத்திர வீரரான ரஷ்யாவின் டேனில் மெட்வதேவ் அதிர்ச்சித் தோல்விகண்டு 2ஆவது சுற்றுடன் வெளியேறினார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டமொன்றில் முன்னணி வீரரான ரஷ்யாவின் மெட்வதேவ், அமெரிக்காவின் லியானெர் டியனுடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் முதல் இரு செட்டை இழந்த மெட்வதேவ், அடுத்த இரு செட்டை போராடி கைப்பற்றினார். இதனையடுத்து நடைபெற்ற கடைசி செட்டை லியானெர் டியன் கைப்பற்றி மெட்வதேவுக்கு அதிர்ச்சி அளித்தார்.



4 மணி 49 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் லியானெர் டியன் 6-3, 7-6, 6-7, 1-6, மற்றும் 7-6 என்ற செட் கணக்கில் மெட்விடேவை வீழ்த்தினார். அதிர்ச்சித் தோல்வியடைந்த மெட்வதேவ் இந்தத் தொடரிலிருந்து வெளியேறினார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7